பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182


# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -326

## ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அவர்களே! யார் பயங்கரவாதிகள்?




## கொரோனா வைரஸ் தாக்கமும், நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும்

## ஆசிய வல்லரசுகளின் பிராந்திய நலனும், தமிழர்களின் அரசியல் தீர்வும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# கொரோனா வைரஸ் தாக்கமும், நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும்



இன்றைய காலசூழ்நிலையில் கொரோனா வைரசினுடைய தாக்கம் உலகளாவிய ரீதியில் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. குறிப்பாக 10 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் இதுவரை பாதிப்படைந்திருக்கிறார்கள். 5 இலட்சத்திற்கும் மேல் மரணங்கள் பதிவாகியிருக்கிறது. இலங்கையை எடுத்துக்கொண்டால் 30 ஆயிரத்தையும் கடந்து கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இதில் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்திருக்கிறார்கள். 170இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்கள். இத்தகையதொரு சூழ்நிலையில் நாட்டினுடைய பொருளாதாரம் என்பது அதள பாதாளத்திற்குள் சென்று கொண்டிருக்கின்றது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சீர்குலைக்கும் வகையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை அந்த நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்துவதே அவர்களுடைய சதித்திட்டம். அந்த அடிப்படையின் கீழ் இன்றும் வீட்டோ அதிகாரம் கொண்ட பல நாடுகள் தமது அடிமைத்தனத்திற்குள் பல நாடுகளை வழிநடத்தி செல்கின்றனர். இதில் ஒரு கட்டமாகவே சீன அரசானது அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், இஸ்ரேலை விட முதன்மையான நாடாக திகழ வேண்டும் அல்லது பேசப்படவேண்டும் என்ற காரணத்தினால் இன்று உலகளாவிய ரீதியில் கொரோனா வைரசை பரப்பி தன் நாட்டினுடைய பொருளாதாரத்தை வலுவாக வளர்த்து வருகிறது எனலாம்.

2030 ஆம் ஆண்டு இலங்கை சீன காலனித்துவத்திற்குள் செல்லும் என்பது இன்றைய அரசியல் நிலைப்பாடு. பொருளாதார அரசியல் நெருக்கடி மற்றும் கொவிட் - 19 தீவிரமடைந்துள்ள இந்த காலகட்டத்தில் ராஜபக்ச அவர்களுக்கு எதிராக குற்ற வழக்குகள் பல இருக்கின்றன. அந்த வகையில் கார்த்திகை மாதம் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையிலான ஐந்து நாட்களில் மட்டும் பல வழக்குகள் ராஜபக்ச குடும்பத்தின் சகாக்களுக்கு பதியப்பட்டுள்ளது.

**அவற்றில் நவம்பர் 19, 2020 மகிந்த ராஜபக்ச அவர்களின் சகாக்களான திரு.அனுசா வெல்பிதா திரு.லலித் வீரதுங்க ஆகியோர் ரூபாய் 600 பில்லியன் அரசாங்க நிதி மோசடி செய்த குற்றச்சாட்டிலிருந்து நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

**20 நவம்பர் 2020 அமைச்சர் ஜனக பண்டாரதென்னகோன் மீதான இரண்டு வழக்குகளின் குற்ற பத்திரிகைகள் நீதிமன்றத்தில் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.**

**நவம்பர் 20 இலங்கை உரக்கூட்டுத்தாபன தலைவர் 20 மில்லியன் ரூபா மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.**

**23 நவம்பர் ரூபாய் 2991 மில்லின் மோசடி செய்த வழக்கில் விடுவிக்கப்பட்ட பசில் ராஜபக்ச அவர்கள் மீதான நீதிமன்றம் விதித்த பயணத்தடையை நீக்கியது.**

**24 நவம்பர் 2020 ராஜபக்ச குடும்பத்தின் கொலைகள், கடத்தல் புரியும் பிள்ளையான் விடுவிக்கப்பட்டார்.**

**24 நவம்பர் லலித் குகன் வழக்கில் மேல் நீதிமன்றம் கோட்டபாய ராஜபக்ச மீதான வழக்கை ரத்து செய்தது.**

இச்சம்பவங்களின் பின்னணியில் தான் கொழும்பு நீதிமன்ற கட்டடத்தொகுதி தீப்பிடித்து எரிந்துள்ளமை பல வழக்குகளை மறைப்பதற்கான நடவடிக்கையாக இருக்குமா?, பதிவுகளை சாட்சிகளை அழித்தொழிப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கையா? என பல கோணங்களில் சந்தேகம் கொள்ள வைத்துள்ளது.

ஆகவே பொருளாதார ரீதியில் பல மில்லியன்களை இலங்கை அரசாங்கம் தன்னகத்தே சுவீகரித்துக்கொண்டு சீனா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் அடிவருடிகளாக செயற்படும் நிலைமை தோன்றியுள்ளது. தமது வாசிகளுக்கு ஏற்ப சிங்கள இனவாத தலைவர்கள் பாராளுமன்றத்தில் பேசுவதும் அதற்கு வெளியில் பேசுவதுமாக பேசி பேசி நாட்களை கடத்தி செல்கிறார்கள். யுத்தம் நிறைவடைந்து 11 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் இந்த நாடு இன்னமும் தன்னிறைவு பொருளாதாரத்தை அடையவில்லை. ஒரு நாடு எப்பொழுது தன்னிறைவு பொருளாதாரத்தை அடைகிறதோ அப்பொழுது தான் அந்த நாட்டில் மக்கள் நிம்மதியாக வாழுகின்ற சூழ்நிலை உருவாக்கப்படும்.

இனப்படுகொலை என்ற விடயத்தில் அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தரப்போவதில்லை. பொருளாதார ரீதியில் ஓரளவேனும் வடகிழக்கு மக்களின் வாழ்வில் சுபீட்சமான ஒரு சூழல் ஏற்படும் வகையில் இந்த அரசாங்கம் நாட்டைக் கொண்டு செல்கிறதா என்றால் அதுவும் சீராக அமையப்பெறவில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்திருக்கவில்லை. மாறாக தமிழ் இனத்துடன் போரிட்டு விடுதலைப்புலிகளின் போராட்டத்தை அழித்துவிடவேண்டும் என்பதிலும் ஈழக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டிலும் தான் இருந்து வந்தது. இலங்கையின் அரசியல் நகர்வுகள் என்பது காலத்துக்கு காலம் வேறுபட்டதொன்று. அதிலும் குறிப்பாக யுத்த காலத்தில் இருந்த நாட்டின் பொருளாதாரமும் அதன் பின்னர் இருந்த நாட்டின் பொருளாதாரமும் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளது.


ஆகவே விவசாயத்தை நாடளாவிய ரீதியில் ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதில் ஒரு கட்டமாக தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டத்தக்கது. ஆனாலும் அதனை அவர்கள் நடைமுறையில் கொண்டு செல்ல முயற்சிக்காமை தான் இலங்கையின் பொருளாதாரத்தை புதிய பாதையில் கொண்டு செல்ல முடியாமைக்கான காரணமாக அமைந்துள்ளது. சீன நாட்டு தலையீடுகள் என்பது இந்த நாட்டில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பிற நாடுகளின் இறக்குமதியை தற்பொழுது கட்டுப்படுத்தியிருக்கின்றார். ஆனால் சீனாவினுடைய முதலீடு என்பது சிங்களவர்கள் மத்தியில் பின்னிப்பிணைந்த ஒன்றாக மாறியுள்ளது. போரை நிறைவு செய்ய உதவிய சீனா இலங்கை பொருளாதாரத்திலும் தனக்கானதொரு இடத்தைபிடித்துள்ளதால் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் சீனாவை இங்கிருந்து எவ்வாறு வெளியேற்றுவது என்ற திட்டத்தையே தீட்டி வருகின்றன. அதுமட்டுமன்றி ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையில் ஒரு தளத்தை உருவாக்கிக் கொள்வதிலும் இந்தியா, அமெரிக்கா அதி கவனம் செலுத்தியுள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முஸ்லிம் வர்த்தகர்களின் பங்களிப்பு என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்று.

சீன உற்பத்திகளை கூடுதலாக முஸ்லிம் வியாபாரிகளே கொள்வனவு செய்கிறார்கள். தற்பொழுது அந்த சூழ்நிலை மாற்றப்பட்டு சிங்களவர்கள் கூடுதலான உற்பத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் வியாபாரத்தை சீரான வழியில் கொண்டு செல்வதற்கும் இலங்கையின் பொருளாதாரத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதும் பெரும்பாலான சிங்களவர்களால் இயலாத காரியம். இத்தகையதொரு சூழ்நிலையில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்த முடியாத நிலையில் மாகாணசபை தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் மக்கள் மத்தியில் பாரிய வறுமை நிலை தோற்றுவிக்கப்படும்.

ஆகவே அரசாங்கம் துரிதகதியில் இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தினையும் புதிய முறையில் கையாளுமாக இருந்தால் மாத்திரமே தன்னிறைவு கொண்ட ஒரு பொருளாதாரத்தை இந்த நாட்டில் கட்டியெழுப்புவதுடன் அந்நிய நாடுகளின் தலையீடுகளை. அவர்களுடைய செயற்பாடுகளை அரசியல் ரீதியாக இந்த நாட்டிலிருந்து விரட்ட முடியும். கொரோனா என்ற வைரசை பரப்பிய சீனா தனது நாட்டை வலுப்படுத்திக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு விட்டது. ஆகவே சீனநாட்டின் தலையீட்டை முதலாவதாக இந்த நாட்டிலிருந்து அப்புறப்படுத்தினால் மாத்திரமே இந்த நாடு பொருளாதாரத்தில் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்ல முடியும்.

**இரணியன்**



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மாகாண சபைத் தேர்தலும் அரசியல் காய்நகர்த்தலும்

2021ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலானது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக அமையப்போகின்றது. சிங்கள பேரினவாத அரசு மாகாண சபைகளையும் கைப்பற்றி தனது சர்வாதிகாரத்தை வடகிழக்கில் நிலைநாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கு அரச கைக்கூலிகளாக செயற்பட்டு வருகின்ற கருணா, பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஏனைய சுயேட்சைக் குழுக்கள் இம்முறையும் மதுபானம், உணவு, பணம் போன்றவற்றை வழங்கி மக்களை ஏமாற்றும் அரசியல் நடவடிக்கையிலே ஈடுபடுவார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

தமிழ் மக்களுடைய இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமாக இருந்தால் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடகிழக்கில் ஆதரிப்பதை தவிர மாற்றுவழியில்லை. அபிவிருத்தி அரசியல் என்பது வேறு உரிமை அரசியல் என்பது வேறு. அரசாங்கம் என்ற வகையில் வடகிழக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டியது என்பது அவர்களுடைய கடமை. குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ அரசாங்கத்தின் பணத்தை தான் செலவீடு செய்வார்கள். அந்த அபிவிருத்தி அரசியலை வைத்து தமிழ் மக்களுக்கான உரிமை அரசியலைக் கொடுத்துவிட்டோம் என்ற போலி தேசியவாதம் பேசுகின்ற அரச கைக்கூலிகளை மக்கள் இனங்காணுகின்ற ஒன்றாகவே இந்த தேர்தலும் அமையப்பெற வேண்டும். மாகாண சபையிலும், உள்ளூராட்சி சபையிலும், பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தலிலும் அபிவிருத்தி சார்ந்த அரசியல் தொடர்பாகவே பேசுவார்கள். தமிழினத்துக்கு உரிமை இல்லாத எந்த அபிவிருத்திகளும் யார் செய்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று.

ஆகவே இம்முறை இடம்பெறப்போகின்ற மாகாண சபைத்தேர்தல் என்பது வடகிழக்கு பகுதிகளை குறிவைத்து தமக்கான வேட்பாளர்களை அரசாங்கம் களமிறக்கி தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடித்து இந்த நாட்டில் ஒரு சிங்கள மயமாக்கலை உருவாக்குவதற்கான அனைத்து திட்டங்களையும் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். பௌத்த இனவாதிகளை வைத்து 2/3 பெரும்பான்மையை சுவீகரித்தது போன்று இந்தத் தேர்தலிலும் பெரும்பான்மையை சுவீகரித்துக்கொள்வதற்கு தமிழ்த் தரப்பை அரசாங்கம் பயன்படுத்த இருக்கின்றது. இதில் யாரெல்லாம் அரசாங்கத்திற்கு விலை போவார்கள் என்பதை இப்போதே ஓரளவு ஊகிக்க முடிகிறது. இருப்பினும் தமிழினத்திற்கு எதிராக போலி தேசியத்தை பேசி வருபவர்களுக்கு தமிழ் மக்கள் சாட்டை அடி வழங்க வேண்டும்.

வட-கிழக்கில் முதலமைச்சர் பதவியை தக்க வைத்துக்கொள்வதனூடாகவே தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை குறைந்த பட்சமேனும் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய தமிழினத்தை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி அந்த அமைப்பை இல்லாதொழித்ததாக அரசாங்கம் நினைக்கிறது. ஆனாலும் சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வளர்ச்சி என்பது இன்று தமிழினம் ஓரளவேனும் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழி சமைத்துள்ளது. ஆகவே இதனைப் புரிந்துகொண்டு தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதிகளை ஆதரிப்பதை விடுத்து தமிழ்க் கட்சிகளை ஆதரிப்பதனூடாக எமக்கான இருப்பை இந்நாட்டில் நாம் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதே இன்றைய நிதர்சனமான உண்மை.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

129



கடந்த வாரத் தொடர்ச்சி...

சாதாரணமான அடைப்பு என்றால் அடைக்கப்பட்டவருக்குச் சீனி அல்லது வெண்சுருட்டுக் கிடைக்காது. கடுமையானதென்றால், அடைக்கப் பட்டவருக்கு உணவு வழங்கப்படமாட்டாது. இது மிக நல்ல பெறுபேறுகளைத் தந்தது. இத்தண்டனை நடவடிக்கை வழமைக்கு மாறாகக் கடினமானதாக இருந்தாலும் நாங்கள் குறித்த சூழ்நிலைகளில் மாத்திரம் இதனைப் பயன்படுத்த அனுமதித்தோம். கெரில்லாத் தந்திரோபாயத்தின் அடிப்படைகள் கெரில்லாவின் தோழன் முன்னணி வரிசையைக் கடத்தல். முன்னணி வரிசையைக் கடந்து எதிரியின் பின்புலத்திற்குள் நுழைவதற்குக் கடின தயார்ப்படுத்தல் வேண்டப்படுகின்றது. செஞ்சேனை ரெஜிமெண்டுகளின் கட்டளையாளர்களுடனான தொடர்பு - இவ்வாறான வெற்றிகரக் கடப்பின் பிரதான நிபந்தனைகளில் ஒன்றாகும். ஓய்வின்றி எதிரியைக் கண்காணி. ஒழுங்கமைக்கப்பட்ட வேவினை மேற்கொள். எதிரியைப் பற்றிய தகவல்களைச் சேகரி. அவனது படைகள் இருக்கின்ற இடம், அவனது படைப்பிரிவுகளின் சந்திப்பு நிலைகள் அமைந்துள்ள இடங்கள், சூட்டாயுதங்களின் அமைப்பு, பாதுகாப்பு நிலைகள் போன்ற பல தகவல்களைச் சேகரிக்க வேண்டும். உனது படைப்பிரிவு செயற்படவுள்ள பிரதேசத்தை நன்கு அறிந்துகொள்ளவும் வேண்டும். வரைபடங்களை ஆராய்தல்.

குறித்த பிரதேசத்தின் மக்களிடம் விசாரித்தல் போன்றன பூரணமாகப் பழக்கமற்ற பிரதேசத்திலும் நன்றாக நிலையறியும் சாத்தியத்தைத் தருகின்றன. பெருங்காடு அமைந்துள்ள இடம், வெட்டைவெளிப் பிரதேசம், கரடுமுரடான தரைப்பிரதேசம், மக்கள் வாழ்விடங்கள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், பாலங்கள் போன்றனவற்றையும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். அப்பிரதேசத்தைப் பற்றித் தெரிந்த பிரதேசத்தின் மக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்ற நம்பகரமான வழிகாட்டிகளைச் சரியாகத் தெரிவுசெய்ய வேண்டும். இவை யாவும் முன்னணி வரிசையைக் கடக்க மிகப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்ய உதவுகின்றன. எதிரிக்குத் தெரியாத வகையில் முன்னணி வரிசையைக்கடக்க வேண்டும். நகர்விற்கு முன்னர் தமது ஆயுதங்களினதும் வெடிபொருட்களினதும் சீர்த்தன்மையைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். இவை யாவும் திடமாகவும் நம்பகரமாக வைக்கப்பட்டிருக்குமாறும் பார்த்துக்கொள்ளல் வேண்டும். அத்துடன் இவை ஆடிக்கொண்டிருக்காமலும், கிலுங்காமலும், சத்தமெழுப்பாமலும், மினுங்காமலும் இருக்குமாறு வைத்திருக்க வேண்டும்.

இராணுவ இரகசியங்களைக் காப்பதற்காக உன்னுடன் உனது ஆவணங்களையோ தனிப்பட்ட குறிப்புக்களையோ புகைப்படங்களையோ எடுத்துச்செல்லாதே. முன்னணி வரிசையைக் கடப்பதற்கு மிகவும் சாத்தியமான காலநிலை புகார், மழை, எம்மை நோக்கி வீசுகின்ற பலமான காற்று, பனி, பனிப்புயல் போன்றனவாகும். காரிருள் - இதுவும் சிறந்த நேரமாகும். முன்னணி வரிசையைக் கடக்கும் போது கெரில்லாக்கள் எதிரிப்படை அணிகளுடன் முட்டுப்படுதல்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மிக அவசியம் ஏற்பட்டாலன்றி, ஏனைய சமயங்களில் முன்னணி வரிசையின் முழுத் தந்திரோபாயப் பின்புலத்தையும் ஒரே நகர்வில் கடக்க வேண்டும். செயற்படத் தீர்மானித்துள்ள பிரதேசத்தில் சாத்தியமானளவு விரைவாகப் பலத்தை ஒன்றுதிரட்டி. எதிரியின் பின்புலத்தில் கெரில்லா வகைத் திகைப்புத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். எதிரியின் கட்டுப்பாடற்ற பிரதேசத் துண்டு இருக்குமானால் ஒப்பீட்டளவில் மிக வேகமாக எதிரியின் பின்புலத்திற்குள் கெரில்லாக் குழுவால் ஊடுருவலாம். இவ்வாறான சமயத்தில் வேவுடன் இரவில் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து நகர்வை மேற்கொள்ளவேண்டும். ஆனால் சூழ்நிலை அதிகமான சமயங்களில் மிகக் கடினமானதாகவே இருக்கின்றது. இவ்வாறான நிலையில் கெரில்லாக்குழு ஒரு மறைப்பிலிருந்து பிறிதொரு மறைப்பிற்கு ஊர்ந்து செல்கின்றது. இதன் போது பக்கவாட்டுப் பகுதிக்குத் தனியான வீரர்கள் அனுப்பப்படுவார்கள். அவர்கள் உண்மையான நகர்வுப் பிரதேசத்திலிருக்கின்ற எதிரியின் கவனம் தம்மை நோக்கித் திரும்பும் படியான வகையில் செயற்படுவார்கள். எதிரிப் படையாட்கள் கூடியளவு நிறைந்ததாக முன்னணி வரிசை இருக்குமானால் கெரில்லாப் படைப்பிரிவு சிறிய குழுக்களாக அல்லது தனித்தனி வீரர்களாக ஊடுருவுவார்கள். இந்நிலைமைகளில் பிரதானமானதாக வரிசைக்குப் பின்னால் சகலரும் ஒன்று சேருமிடத்தை நியமிப்பது விளங்குகின்றது. கெரில்லாக்கள் முன்னணி வரிசையைக் கடந்து செல்லும் போது எதிரியின் பின்புலத்திலுள்ள அவனது சூட்டு நிலைகள் அவனது சேமப்படைகள் ரோந்து அணி தற்காப்பு அணி போன்றவற்றினை எதிர்கொள்ளக்கூடும். இவ்வாறான சந்திப்புகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் முன்னரேயே தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். எந்நேரத்திலும் எச்சரிக்கையாகவும் சமருக்கான தயார் நிலையிலும் இருக்கவேண்டும். வேவும் தற்காப்பும் திகைப்புக்களிலிருந்து உன்னை விடுவிப்பதற்கான முன்னெச்சரிக்கை செய்கின்றன.

உருமறைப்பு நடவடிக்கைகள் யாவற்றையும் கடைப்பிடி இருமாதே. உனது தோழர்களுடன் கதைக்காதே புகை பிடிக்காதே அவதானமாகவும் மெதுவாகவும் காலடி எடுத்துவை. வீதிகளில் நகர்வதைத் தவிர். ஏனெனில் வீதிகளை எதிரி பயன்படுத்துவான். அவற்றால் அவனது காவற்படையும் ரோந்தும் செல்லும் வீதிகளிலும் நடைபாதைகளிலும் எதிரி கண்ணி வைப்பான். அத்துடன் அங்கே பதுங்கித் தாக்குதலுக்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பான். திசைகாட்டித் திசையில் நகரும் போதும் வழிகாட்டியின் துணையுடன் நகரும் போதும் அத்துடன் சத்தத்தைக் கொண்டு நகரும் போதும் இரவில் நிலையறிய மறக்காதே. கூடியளவில் எதிரிப்படைகள் நிறைந்த பகுதியைக் கடக்கும் போது இரவு வேளையைப் பயன்படுத்தத் தவறாதே.

ஆனால் விடிகாலையில் மறைப்பான பாதுகாப்பான இடத்தில் ஒளிந்துகொள். காட்டிலிருந்து காட்டிடைவெளி, வீதி, காட்டுச்சாலை போன்றவற்றிற்கு வரும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தனியாக இருக்கின்ற வீடுகளில் கவனம் செலுத்திக்கொள். அவற்றை மாத்திரம் நன்றாக வேவு பார்க்க வேண்டும். அங்கு எதிரி இல்லையென்பதை உறுதிப்படுத்திய பின்னர் வேகமாக அப்பால் நகர வேண்டும். எதிர்பாராத வகையில் பாசிச ஆயுததாரிகளின் பதுங்கித் தாக்குதலுக்குள் அகப்படக்கூடிய சாத்தியமும் இருக்கின்றதென்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் வளைவுகளைக் கொண்ட பிரதேசங்கள், வீடுகள், பள்ளத்தாக்குகள், காட்டிடையேயுள்ள கிராமங்கள் போன்ற இடங்களில் ஒளிந்திருப்பார்கள். ஆயுததாரிகள் தமக்கருகாகக் கெரில்லாக் குழுவைக் கடந்துசெல்ல விடுவார்கள். பின்னர் பயப்பீதியை உண்டாக்கி பின்னாலிருந்து தீவிரமாகத் தாக்குவார்கள்.

பாசிச ஆயுததாரிகளின் சூடுகள் உளரீதியில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை நினைவிற் கொள். இதனால் படைகளுக்குக் கணிசமானளவு இழப்பு ஏற்படுகின்றது. எதிர்பாராத வகையில் எதிரியுடன் முட்டுப்படும் போது கெரில்லாக் குழு பதுங்கித் தாக்குதலை மேற்கொள்ளப் பதுங்கிக்கொள்ள வேண்டும். முன்னரேயே நியமிக்கப்பட்ட அழிப்பாளர்கள் (பாசிச ஆயுததாரிகளை வேட்டையாடுபவர்கள்) அவர்களை அழிக்கின்றார்கள். பாசிச ஆயுததாரர்கள் சூட்டை மேற்கொள்ளும் போது அழிப்பாளர்கள் சூட்டுத்திசையைக் கணித்து வேகமாக நகர்ந்து எதிரியை நெருங்குவார்கள். படிப்படியாக அவனைச் சுற்றிவளைப்பார்கள். பாசிச ஆயுத தாரிகளின் சூடுகள் நிறுத்தப்படுகின்றதென்றால் அவன் இலக்கைத் தேடுகின்றான் என்று அர்த்தமாகும்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# சிறையில் வாடும் முன்னாள் போராளிகளும், விடுதலையான பிள்ளையானும்



இலங்கை இன விடுதலைக்கான போர் உலக வல்லரசுகளின் துணையோடு 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் இலட்சக்கணக்கானமக்களோடும்பல்லாயிரம் விடுதலைப்புலி போராளிகளுடனும் புதைக்கப்பட்டது. இதில் சுமார் 10.000 போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு மக்களோடு இணைக்கப்பட்டதாக அப்போதைய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ச அவர்கள் தெரிவித்துள்ளார். இப்போராளிகளை விட இன்னும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். பல ஆயிரம் போராளிகள் இன்னும் சிறைகளில் அரசியல் கைதிகளாக உள்ளனர். இறுதி யுத்தத்தில் சரணடைந்த போராளிகளை விட இலங்கையில் இடம்பெற்ற இன விடுதலைப் போரில் தம் இனத்துக்காக போராடிய பலர் கடந்த பல ஆண்டுகளாக சிறையில் வாடுகின்றனர். இதில் பயங்கரவாத தடைச்சட்டம் மூலம் கைது செய்யப்பட்ட பலர் விசாரணைகள் ஏதுமின்றி சிறையிலுள்ளனர். நீதிமன்றங்களால் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைகளில் வாடும் சில அரசியல் கைதிகள் தங்களின் தண்டனை காலம் முடிவதற்குள் சிறைக்குள்ளேயே இறந்த நிகழ்வுகளும் உள்ளன. அதை விட கொடூரமான விடயம் யாதெனில் சிறைக்கலவரங்களின் போது பல அப்பாவி தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளுக்குள் வைத்து படுகொலை செய்யப்படுவது மிகப்பெரும் கொடுமையான விடயம். கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பது ஐ.நா சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மனித உரிமை ஆர்வலர்கள் ஜெனீவா மனித உரிமை அமைப்புகள் இது தொடர்பாக அவ்வப்பொழுது குரல் கொடுத்தாலும் இவ் அரசானது எதற்கும் செவி சாய்ப்பதாக தெரியவில்லை. இவ்வாறு சிறையில் வாடும் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்யக்கோரி பல ஆண்டுகளாக பல அகிம்சை ரீதியான போராட்டங்களை மேற்கொண்டு வந்தாலும் அது எல்லாம் வெறும் வாக்குறுதிகளால் மழுங்கடிக்கப்படுகின்றது.

குறிப்பாக வெலிக்கடை சிறைச்சாலை, அனுராதபுரம் சிறைச்சாலைகளில் நீராகாரம் இன்றி தமிழ் அரசியல் கைதிகள் உண்ணா நோன்பு இருந்து அவர்களது உடல் நிலை ஆபத்தான கட்டத்தை அடையும் பொழுது எமது தமிழ் அரசியல் தலைமைகள் முதல் கொண்டு அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ் தலைமைகள் உட்பட பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கி அவர்களது போராட்டத்தை முடித்து வைப்பார்கள். ஆனால் கொடுக்கப்படும் வாக்குறுதிகள் அனைத்தும் காற்றோடு காற்றாக மறைந்துவிடும் இவ்வாறு பல ஆண்டு காலமாக இக்கைதிகள் தமது விடுதலைக்காக போராடி வருகின்றனர். ஆனால் காலம் தான் அவர்களுக்கு விடியவில்லை. கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் இடம் பெற்ற ஓர் சம்பவம் சிங்கள மக்களைக்கூட கலங்க வைத்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட ஆனந்த சுதாகர் என்ற கைதியின் மனைவி சுகயீனம் காரணமாக இறந்த நிலையில் அவரது இறுதிக் கிரியைகளுக்காக சிறைச்சாலையில் இருந்து விசேட பாதுகாப்புடன் அவரது ஊரான கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டு இறுதிக்கிரியைகள் முடிவடைந்தவுடன் அவரை திரும்பவும் சிறைச்சாலைக்கு அழைத்து செல்ல வாகனத்தில் ஏற்றிய பொழுது அவரது மகள் (வயது-8) ஓடிச்சென்று தந்தையை சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றுவதற்கு முன்னர் அந்த வாகனத்தில் ஏறி தானும் அப்பாவுடன் செல்ல உள்ளதாக கூறி மிகப் பெரிய சத்தமிட்டு அழுத நிலையில் எனக்கு அம்மாவும் இப்பொழுது இல்லை அப்பாவையாவது விட்டுவிடுங்கள் அல்லது அப்பாவுடன் என்னையும் கூட்டிச் செல்லுங்கள் என்று கூறி அழுத சம்பவம் அங்கு காவலுக்கு வந்த இராணுவ மற்றும் பொலிசார் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. அனைத்து ஊடகங்களும் இச் செய்தியை பிரசுரித்த அடுத்த நாள் சிங்கள நாளிதழ்களில் இது சம்பந்தமாக செய்திகள் வந்த பொழுது சிங்கள மக்கள் பலர் கலங்கியதாகவும் பல சிங்கள மக்கள் அவரை விடுதலை செய்யும்படி கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இது தொடர்பாக மிக விரைவில் அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார். இதேவேளை சுதாகரின் மகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றையும் மிக உருக்கமாக எழுதியிருந்தார்.

ஆனால் இதுவரை அவர் விடுதலை செய்யப்படவில்லை. அன்று அந்த ஆட்சிக்கு சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கூட இது தொடர்பாக எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கைகளும் எடுக்காமல் வாழா வெட்டியாக இருந்துவிட்டு இன்று பாராளுமன்றத்தில் வீர வசனங்கள் பேசி காலத்தை கழிப்பது தான் இவர்களின் அரசியல் சித்தாந்தம். விடுதலைப்புலிகளின் ஆட்சி இடம்பெற்ற காலப்பகுதியில் இலங்கை இராணுவச்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு விடுதலைப் புலிகளின் காவலில் வைக்கப்பட்டு இருந்த நிலையில் அவ் இராணுவ வீரரை பார்க்க அவரது மனைவி, மகள் மற்றும் உறவினர் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள தனது கணவரை பார்க்கும் சந்தர்ப்பத்தில் அந்த இராணுவ வீரரின் மகள் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை எழுதி அங்குள்ள போராளிகளிடம் கொடுத்துள்ளார்.

அக்கடிதம் உடனடியாக பிரபாகரனிடம் சேர்க்கப்பட்டது. அக் கடிதத்தை வாசித்த தலைவர் அவர்கள் மனமிரங்கி அவ் இராணுவ வீரரை அவரது மகளுடன் செல்ல அனுமதி வழங்கியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அச் செய்தியை பார்த்த சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். அரசால் பயங்கரவாதிகள் என விழிக்கப்படும் புலிகளின் மனசாட்சி கூட இந்த சிங்கள இன தலைமைகளுக்கு இல்லை என்றே கூறவேண்டும். தனது மனைவியை இழந்து தனித்து போயிருக்கும் தனது மகளைக்கூட வளர்க்க முடியாமல் சிறையில் வாடுவது போன்று இன்று பல அரசியல் கைதிகளின் நிலை இவ்வாறு நீண்டு செல்லுகின்றது.

எமது தமிழ் அரசியல் கட்சிகளின் உறுதுணையுடன் ஆட்சி நடத்திய மைத்திரி - ரணில் ஆட்சியில் விடுவிக்கப்படாத கைதிகள் கோட்டபாய அரசின் ஆட்சிக்காலத்தில் விடுதலை கிடைக்கும் என்பது நடக்காத விடயம் ஆகும். இருந்தும் தமிழர்கள் கேட்டும் அழுத்தம் கொடுத்தும் வீர வசனங்கள் பேசியும் பழகிப்போனதால் அதே மாதிரி இவ்வரசிடம் கேட்டுப் பார்க்கலாம். இவ் அரசு ஆட்சிக்கு வந்தவுடன் இராணுவ மயப்படுத்தலை மிக வேகமாக முன்னெடுத்து இருந்தது. அத்துடன் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பதவியேற்றவுடன் யாழ் மீசாலை பகுதியில் 7 அப்பாவி தமிழர்களை சுட்டும் வெட்டியும் மண்ணில் புதைத்து நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவரை பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்தார்.

அத்துடன் செம்மணி படுகொலையுடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய்கள் கூட சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனை விட ஓர் நாட்டின் பிரதமர் அதாவது உலக வல்லரசான இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி அவர்கள் 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்தியா ஒப்பந்தம் விடயமாக இலங்கை வந்தவுடன் அவருக்கு இராணுவ மரியாதை வழங்கியபொழுது அதில் ஓர் இராணுவ வீரர் தனது துப்பாக்கியின் பிடியால் அவரை தாக்க முற்பட்டபோது அவர் மயிரிழையில் தப்பித்துக்கொண்டார். உடனடியாக அச்சிப்பாய் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் அவர் மன நோயாளி என்ற போர்வையில் விடுதலை செய்யப்பட்டார். அதேபோல் திருகோணமலை தொண்டு நிறுவன ஊழியர்கள் கொலை வழக்கில் கைதான இராணுவ கடற்படை சிப்பாய்கள் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு 1980 தொடக்கம் இறுதி யுத்தம் முடியும் வரை பல அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்த இராணுவ கடற்படை வீரர்களை இச் சிங்களப் பெரும்பான்மை தலைமை விடுதலை செய்ததுடன் மட்டுமன்றி அவர்களுக்கு பதவிகளைவழங்கிகௌரவித்துவருகின்றது. இந்நிலையில் ஓர் நாடு ஓர் மக்கள் என்ற விதண்டாவாத சித்தாந்தத்தை பேசி தமிழ் மக்களை ஏமாற்றி தன் பேரினவாத அரசியலை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு படுகொலைகள் புரிந்த இராணுவச் சிப்பாய்களை விடுதலை செய்யும் இவ் அரசானது சிறையில் பல ஆண்டு காலமாக வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. தனக்கு சாமரம் வீசும் சில தமிழ் இனத்துரோகிகள் என மக்களால் அடையாளமிடப்பட்ட சிலரை இவ் அரசானது தனது சுயநல அரசியல் தேவைக்காக விடுதலை செய்துள்ளது. அண்மையில் விடுதலை செய்யப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினரும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் எனச் சொல்லும் தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சந்திரகாந்தன் பிள்ளையான் என்பவர் கிறிஸ்மஸ் ஆராதனையில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை ஆலயத்துக்குள் வைத்து சுட்டு கொன்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்த நிலையில் இன்று கோட்டபாய அவர்களின் ஆட்சியில் பிணை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இப்பிள்ளையான் மட்டக்களப்பில் இடம்பெற்ற பல படுகொலைகள் பலர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கும் இவருக்கும் நேரடித் தொடர்புகள் உள்ள நிலையில் இவர் தற்பொழுது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். காரணம் இவர் மகிந்த மற்றும் கோட்டபாய அவர்களின் தீவிர விசுவாசி. இவரை தங்களின் சுயநல அரசியல் இலாபங்களுக்காக விடுதலை செய்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி விடயங்களுக்கு பொறுப்பு பதவி கொடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் மேய்ச்சல் தரை விடயம் தொடர்பாக இவரோ அல்லது இவரது கட்சியோ அரசுக்கெதிராக குரல் எதுவும் கொடுக்கவில்லை.

தனது மாவட்டத்தில் உள்ள கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு கூட இவர் அரசை எதிர்க்க துணியவில்லை. அதற்கு பரிசாக தான் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதேபோல் தான் முன்னாள் விடுதலைப்புலிகளின் தளபதியும் இந்நாள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிழக்கு மாகாண அமைப்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் என அழைக்கப்படும் கருணா அம்மான் அவர்கள் விடுதலைப்புலிகளின் காலத்திலும் சரி அதன் பின்னரும் பல படுகொலைகளை புரிந்தவர். முஸ்லீம் மக்கள் அத்துடன் எல்லை கிராமங்களில் உள்ள அப்பாவி சிங்கள மக்கள், பௌத்த தேரர்கள் என இவரால் படுகொலை செய்யப்பட்டவர்கள் ஏராளம். இவர் விடுதலைப்புலிகளின் காலத்தில் தளபதியாக இருந்தபொழுது இவருடன் இணைந்து களமாடியவர்கள்கூட இன்று சிறை வாசம் அனுபவிக்கின்றனர். ஆனால் இவர் இன்று சுதந்திரமாக நடமாடி வருகின்றார். சிங்கள இராணுவ பாதுகாப்புடன்! அன்று இவர்களின் கட்டளைகளுக்கு செயல் வடிவம் கொடுத்த அப்பாவி போராளிகள் இன்று சிறைகளில் வாடுகின்றனர். அவர்களின் விடுதலைக்கூட இவ்வாறு அரசின் சுயநலவாத அரசியலுக்காக வெளியில் செயற்படும் இவர்கள் ஓர் ஆக்கபூர்வமான விடயத்தையோ அல்லது ஓர் அழுத்தத்தையோ கொடுக்க முடியாமல் கையறு நிலையில் அரசியல் செய்கின்றனர்.

இதேபோல் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் தலைமைகள் கூட இக்கைதிகள் விவகாரத்தில் எதுவிதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இன்றி பாராளுமன்றத்தில் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சாட்டி தமது அரசியல் வாழ்வை கழிக்க உள்ளனர். தற்பொழுது இவ் அரசின் பலம் பொருந்திய அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூட பாராளுமன்றத்தில் எதிர்தரப்பு தமிழ் அரசியல் தலைமைகளை சாடி அவர்கள் செய்யும் அரசியலை கிண்டலடித்து வருகின்றாரே ஒழிய இக்கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி - பிரதமருக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்க முடியாமல் செயலற்ற மாயையான அரசியலை மேற்கொண்டு வருகின்றார். இவர்களால் இது தொடர்பில் எதுவும் செயற்படுத்த முடியாது. அரசு மனம் வைத்தால் ஒழிய இக்கைதிகளின் வாழ்வில் விடிவில்லை.

தற்பொழுது சிறைகளில் கொரோனா தொற்று பரவிவரும் நிலையில் நீண்டகாலம் சிறையில் இருக்கும் கைதிகளை விடுதலை செய்ய அரசு முடிவு செய்துள்ளதாக தெரியவரும் நிலையில் இப்பொழுதாவது இவ் அரசியல் தலைமைகள் ஒன்றாக இணைந்து ஒரு கொள்கை அடிப்படையில் இக் கைதிகள் விடுதலைக்கு உதவ முன்வர வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். இல்லாவிட்டால் இக்கொரோனா பரவலுடன் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளால் கொரோனா தாக்கத்தோடு அவர்களின் உயிர்களுக்கு கூட உத்தரவாதம் இல்லாதநிலை தோன்றும்.

புனர்வாழ்வு அழிக்கப்பட்ட போராளிகள் கூட இன்று சமூகத்தில் நிம்மதியான வாழ்வை வாழ முடியாமல் புலனாய்வாளர்களின் மிரட்டல், தொடர் கண்காணிப்பு என ஓர் சுதந்திரமற்ற வாழ்வையே அவர்கள் சமூகத்துடன் வாழ்ந்து வருகின்றனர். எனவே சகல தமிழ்த் தலைமைகளும் ஒருங்கிணைந்து இக் கைதிகளின் விடுதலைக்கு ஆக்கபூர்வமாக செயற்பட்டு உதவ முன்வரவேண்டும். இல்லாவிடில் அவர்களை இழக்கவேண்டிய சூழல் ஏற்படும். சிந்தித்துச் செயற்படுவீர்களாக.

**தாயகத்தான்**

# கொரோனா வைரசும், முஸ்லீம்களின் ஜனாசாக்களும்

இன்று உலளாவிய ரீதியில் கொரோனா வைரசினுடைய தாக்கம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதற்கு விடைகாணும் வகையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும் சரியான முறையில் அதனைக் கட்டுப்படுத்த இயலாமல் உள்ளது என்பது வருந்தத்தக்கதொன்று. இலங்கையைப் பொறுத்தவரையில் முஸ்லீம்களின் ஜனாசாக்களை எரிக்கவேண்டும் என்கின்ற அரசின் நிலைப்பாடானது முஸ்லீம் மத்தியில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இவ் எரிப்புவிவகாரத்தில் மதத்தலைவர்களே அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். இதில் அரசியல்வாதிகள் தலையிடுவதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாததொன்று.

ஒரு காலகட்டத்தில் முஸ்லீம் அரசியல்வாதிகள் கூறுகின்ற விடயங்களையே அரசு நடைமுறைப்படுத்தியது. இலங்கையின் இராணுவக் கட்டமைப்பில் நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லீம் புலனாய்வாளர்கள் கடமையாற்றுகிறார்கள். இவர்கள் CID, NIB, TID, இராணுவ பொலிஸ் புலனாய்வுகள் என வகைதொகையின்றி இருக்கின்றார்கள். இவர்களை வைத்து அரசாங்கம் விடுதலைப்புலிகளின் போராட்டத்தைக் காட்டிக்கொடுப்பதற்கும் தமிழ் மக்களது ஆயுதப்போராட்டத்தை அழித்தொழிப்பதற்கும் என தமது தேவைக்காகப் பயன்படுத்தியது.

2009ஆண்டு யுத்தம் முடிவடையும் வரையிலும் இவர்களுடைய காட்டிக்கொடுப்புக்கள் அதிகளவில் இருந்தது. அதன் பின்னர் முஸ்லீம் தரப்பினர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டமையினால் தம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்கள் என்று நம்பியிருந்தார்கள். அவ்வாறு நம்பியிருந்தபோதுதான் முஸ்லீம் அரசியல்வாதிகளை பிளவுபடுத்துகின்ற வேலையில் அரசு மிகத் தீவிரமாக ஈடுபட்டது. முஸ்லீம்கள் தமது மதத்தை வளர்ப்பதிலும், மதரசாக்களை திறப்பதிலும் கவனம் செலுத்தியதுடன் தமக்கான தனி அலகு ஒன்றினை உருவாக்கிக் கொள்வதிலும் முனைப்பாச் செயற்பட்டனர்.

அதுமட்டுமன்றி தமது இனத்தைப் பாதுகாத்துக்கொள்ள முஸ்லீம் அமைப் பொன்றினை சஹ்ரான் தலைமையில் உருவாக்கியும் கொண்டார்கள். அதனுடைய பிரதிபலிப்பே கடந்த வருட ஈஸ்டர் குண்டுத்தாக்குதலாகும். இந்தக் குண்டுத்தாக்குதலினால் இலங்கையின் பொருளாதாம், சுற்றுலாத்துறை, பாதுகாப்பு என்பன வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அதிலிருந்து இன்னமும் மீட்சி பெற இலங்கையரசால் முடியவில்லை.

இத் தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லீம்களது ஒரு சில அமைப்புக்கள் இலங்கையிலும் தடைசெய்யப்பட்டது. அதன் பின்னர் இவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அவதானிக்கப்பட்டது. கடந்த பொதுத் தேர்தலில் இவர்கள் வெற்றி பெற்றாலும் கடந்த அரசுகளில் பெற்றதைப் போன்று அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் என்று இருந்தனர். ஆனால் ஒருவருக்கு மாத்திரமே நீதியமைச்சு வழங்கப்பபட்டது. அதிலும் மிக முக்கியமாக இந்நாட்டில் முஸ்லீம் நீதியமைச்சரைக் கொண்டுவருவதன் ஊடாக அரபு நாடுக ளிலும் ஒரு நன்மதிப்பை பெற்றுவிடலாம் என ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் எண்ணியே அவரையே நியமித்தார். இலங்கையில் மூவின மக்களுக்கும் சமமானநீதிவழங்கப்படுவதில்லை. முஸ்லீம் ஒருவரே இந்த நாட்டில் நீதி தொடர்பாக முடிவுகளை எடுக்கிறார் என உலக நாடுகள் நம்பிக்கொள்ளும். ஆனால் அவருக்கு அரசு கடிவாளம் ஒன்றினைக் கொடுத்தே நீதியமைச்சர் ஆக்கியிருக்கிறார்கள்.

துறைசார்ந்தவர்களுக்குஅமைச்சுப்பதவிகள் இந்த அரசினால் வழங்கப்படவில்லை. வழங்கப்பட்ட அமைச்சுப் பதவிகளைப் பார்க்கின்றபோது முஸ்லீம்களையும் தமிழர்களையும் பழிவாங்குகின்ற ஒரு எண்ணத்துடன் தான் இந்தப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக சொல்லப்போனால், இலங்கையின் நிகழ்கால அமைச்சரவையில் 27 பேர் அங்கம் வகிக்கிறார்கள். இதில் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த

01.கோட்டபாய ராஜபக்ஷ
02.மகிந்த ராஜபக்ஷ
03.சமல் ராஜபக்ஷ
04. நாமல் ராஜபக்ஷ ஆகிய நால்வரும் உள்ளடங்கி இருக்கிறார்கள்

27 அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் இலங்கை அமைச்சரவையில் உள்ள 17 அமைச்சர்கள் வெறும் பாடசாலை கல்வி அல்லது அதற்கும் குறைவான படிப்பை மட்டுமே தங்களுடைய தகுதியாகக் கொண்டு இருக்கிறார்கள். அதாவது இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 63% வீதமான அமைச்சர்களின் கல்வி தகுதி வெறும் பாடசாலை கல்வி அல்லது அதற்கும் குறைவானதாக காணப்படுகிறது.

ஒரு பொதுமகன் பாடசாலை கல்விக்கும் குறைவான தகுதியுடன் அரச அலுவலகம் ஒன்றின் உதவியாளராக கூட நியமனம் பெற முடியாத சூழல் நிலவும் நாடு ஒன்றில் பாடசாலை கல்விக்கும் குறைவான தகுதியுடன் அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்படும் விசித்திரம் இலங்கையில் தான் நிலவுகிறது. இது தவிர பேராசிரியர் பீரிஸ், சரத் வீரசேகர, உதய கம்மன்பில தவிர்ந்த எவருக்கும் தாங்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள துறை சார்ந்த அனுபவம் அல்லது அறிவு இல்லை.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 18 அமைச்சர்கள் குற்ற பின்னணி கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதாவது 67% வீதமான அமைச்சர்கள் குற்றச்செயல்களுடன் தொடர்பட்டவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக

01.கோட்டபாய ராஜபக்ஷ
02.மகிந்த ராஜபக்ஷ
03.ரோஹித அபயகுணவர்த்தன
04.மஹிந்தானந்தா அலுத்கமகே
05. எஸ்.எம்.சந்திரசேன
06.ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ
07.உதய கம்மன்பில
08.பந்துல குணவர்த்தன
09.காமினி லொக்குகே
10.கெஹெலிய ரம்புக்வெல்ல
11.பிரசன்ன ரணதுங்கே
12.விமல் வீரவன்ச
13.நாமல் ராஜபக்ஷ
14.சி.பி.ரத்தனாயக்க
15. டக்லஸ் தேவானந்தா ஆகியோர் மீது பல்வேறுபட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் (அரச நிதி கையாடல்) தொடர்பான வழக்குகள் / மோசடி புகார்கள் நிலுவையில் இருக்கிறது அத்துடன் கோட்டபாய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஜனக பண்டார தென்னகோன், டக்ளஸ் தேவானந்தா, சரத் வீரசேகர ஆகியோர் தனிப்பட்ட மற்றும் அரசியல் கொலைகள், கடத்தல்கள் சார்ந்த கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள்.

அரசியல், பொருளாதார மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து உயர் மட்ட தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டை வழிநடத்தவேண்டிய அமைச்சரவை அமைச்சர்கள் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக செயல்படுவதிலும் அவர்களின் இன மற்றும் மத நம்பிக்கைகளுக்கு எதிராக பேசுவதற்கும் நேரத்தை செலவு செய்து வருகிறார்கள். மறுபுறம் குறளி வித்தைகளையும் செய்து வருகிறார்கள்.

அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்நாட்டில் என்னவென்றாலும் செய்துவிடலாம் என்கிற மமதையில் இருக்கிறார்கள். அண்மையில் நீதியமைச்சர் முஸ்லீம்கள் மீது



தூண்டப்படுகிற வன்முறைகளும் ஜனாசா எரிப்பு விவ காரமும் முஸ்லீம் இனத்தை இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என்கிற கருத்தினை அலி சப்ரி அவர்கள் தெரிவித்ததாகவும், அவர் தெரிவித்த கருத்துக்களை ஒருசில ஊடகங்கள் அதனைத் திரிபுபடுத்தியும் எழுதியிருந்தார்கள். அலி சப்ரியின் கருத்து தொடர்பாக அரசு இதுவரையிலும் எந்தவிதக் கருத்தினையும் தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும் காத்தான்குடியில், சாய்ந்தமருதில் முஸ்லீம் தீவிரவாதிகள் ஆயுதப் பயிற்சி பெற்று வந்தார்கள் என்பது அரசினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுமுஸ்லீம்களுடையஜனாசா விவ காரம் தொடர்பாக அவர்களது உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வதற்கு அரசு உடன்படுகிறதா? இவ்வாறு அரசு தீவிரப்போக்குடன் செயற்படுவர்களாயின் முஸ்லீம்கள் இலங்கையைச் சார்ந்தவர்கள் அல்ல என்பதும் இது ஒரு மனிதாபிமானமற்ற அரசின் செயற்பாடு என்பதும் உறுதிப்படுத்தப்படும். இவர்களை அடக்கம் செய்ய மாலைதீவு அரசாங்கம் இலங்கை அரசிடம் அனுமதி கோரினால் இந்நாட்டில் பிரச்சினைகள் மீள வும் உருவாகும். மற்றொரு விடயமாக உலக நாடுகளில் கொரோனா தொற்றானால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் புதைக்கப்படும் நிலையில் இலங்கையில் ஏன் இந்த ஓர வஞ்சகம். மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹம்மட் சோலி இது தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன் வெளிவிவகார அமைச்சர் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றினையும் செய்துள்ளார்.

ஆகவே இனிவரும் காலங்களில் என்ன இடம்பெறப்போகிறது என்பது தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் கிளர்ந்துள்ளன. முஸ்லீம் அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் அரசினை ஆதரிக்கப்போகின்றார்களா இல்லையா என்கிற நிலைப்பாட்டில் இருந்து வெளியில் வரவேண்டும். சலுகை அரசியலுக்காக அரசுடன் இணைந்து செயற்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. முஸ்லீம் இனத்தை தொடர்ந்தும் ஒரு அடிமைத்தனத்திற்குள் அழைத்துச் செல்வதாகவே இது அமையும்.

தமிழ் மக்களின் போராட்டம் பற்றி முஸ்லீம் அரசியல் தலைமைகளின் அன்றைய இன்றைய நிலைப்பாடு இது மிக வும் ஒரு முக்கியமான விடயம். முப்பது வருட காலப்போராட்டத்தில் ஊர்காவற்படைஎன்கிற போர்வையில் முஸ்லீம்களில் சிலர் அரசுடன் இணைந்து அப்பாவி தமிழ் பொதுமக்களை வெட்டியும் சுட்டும் கொன்றனர்.

கிழக்கு மாகாணத்தில் பாதர் கேவியர் உட்பட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். அது மட்டுமன்றி சொத்துக்கள் சூறையாடப்பட்டது. கிழக்கில்பல இந்து ஆலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. ஏறாவூர் அக்காலத்தில் தமிழ்க் கிராமம். அதற்கான சான்றுகள் இருக்கிறது. பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொலை செய்யப்பட்டபோது எந்தவொரு முஸ்லீம் தரப்பும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. ஆனால் தற்போது முஸ்லீம்களின் ஜனாசாக்கள் எரிக்கப்படுகின்ற போது தமிழ் மக்களின் போராட்டம் சரி என்றும் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தது கருணா என்றும் பிரபா கரன் இருந்திருந்தால் இப்படி நடக்காது என்றும் கூறுகின்றனர். தங்களது தேவைக்கு மாத்திரம் ஒருவரைப் பயன்படுத்துகின்ற நிலைமையையே இந்த அரச தரப்பு கொண்டிருக்கிறது என்பதை தமிழ் பேசும் சமூகங்கள் உணரவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டத்தில் இவர்கள் கலந்துகொள்ளவில்லை. குறிப்பாக இராணுவப் புலனாய்வுகளில் பணிபுரிந்து வந்த முத்தலீப், நிலாம்டீன், மௌஃரூப், றியாஸ், நியாஸ் போன்ற இவர்களைப் போன்ற பல புலனாய்வாளர்கள் அப்பாவி தமிழ் இளைஞர்களை புலி முத்திரை குத்தி சிறையில் அடைத்தனர். பல உயிர்கள் இவர்களாலும் பறிக்கப்பட்டிருக்கிறது.


இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரசுக்கெதிராக வன்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் தூண்டப்படுகின்றனர். விடுதலைப்புலிகள் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் முஸ்லீம்களையும் இணைத்துக்கொண்டுதமிழ்பேசுபவர்களாய் வடகிழக்கு இணைந்த தாயகத்திற்காகவே கடந்த முப்பது வருட காலமாகப் போரிட்டார்கள். இந்தப் போராட்டத்தின் அரசியல் நடவடிக்கைகளில் ரவூப் ஹக்கீம் அவர்கள் ஒஸ்லோ பேச்சுக்களில் குழப்பம் விளைவித்தார். தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் வருகின்றபோது அதனைக் குழப்புகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சிங்கள அரசியல் தலைமைகள் ஒருபோதும் சிறுபான்மை சமுதாயத்திற்கு விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை எனத் தெரிந்திருந்தும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக செயற்பட்ட இவர்களின் செயற்பாடு இன்று சிறுபான்மைச் சமுதாயத்தை ஒரு குரங்குப் பிடிக்குள் சிக்கவைத்திருக்கிறது. ஆகவே முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரமும் அரசியல் மயப் படுத்தப்பட்டுள்ளது. எது எவ்வாறாக விரும்பினும் அரசு மீண்டும் ஒரு இரத்தக்களறியை இந்த நாட்டில் பரப்பவிட வேண்டும் என எதிர்பார்க்கிறதா? என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலும் அதற்கு முன்னரான காலப்பகுதிகளிலும் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப் பட்டுள்ளார்கள். ஆகவே வரலாற்றை ஒரு கனம் திரும்பிப்பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் நிலைப்பாடு முஸ்லீம்களின் ஜனாசாக்களை எரிப்பதாக இருந்தாலும் முஸ்லீம் தலைமைகள் ஒருபோதும் அரசிலிருந்து விலகப்போவதில்லை என்கின்ற நிலைப்பாட்டையே இன்றைய ஜனாசா எரிப்பு விவகாரம் எடுத்துக்காட்டுகிறது.

**நெற்றிப்பொறியன்**

# ஆசிய வல்லரசுகளின் பிராந்திய நலனும், தமிழர்களின் அரசியல் தீர்வும்



இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது தொடக்கம் சிறுபான்மை தமிழினம் பெரும்பான்மை இனத்தின் பௌத்த மேலாதிக்க சிந்தனையால் அடக்கப்பட்டு அவர்களது அரசியல், கலாச்சாரம் அனைத்தும் மழுங் கடிக்கப்பட்டு வந்த நிலை 1956 தொடக்கம் 1970கள் வரை தமிழர்களின் பலம்பெரும் தமிழ் தலைமைகள் இந்த பேரினவாத சித்தாந்தம் கொண்ட அரச தலைமைகளுக்கு எதிராக அகிம்சை வழியாக பல போராட்டங்களை மேற்கொண்டு வந்த நிலையில், அதனை அக்காலகட்டங்களில் இருந்த அரசியல் தலைமைகள் தமது இரும்புக்கரம் கொண்டு அடக்கியது மட்டுமல்லாமல் காடையர்களை ஏவி அப்பாவி தமிழர்களை கொன்று குவித்தது. இதில் பல மூத்த அரசியல் தமிழ் தலைமைகள் கூட இத் தாக்குதல்களில் காயமடைந்தனர். அவர்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இவ்வாறு 1958, 1968 என சிங்களப் பேரினவாதம் தமிழர்களை தனது கொடூர முகம் கொண்டு அடக்கியது. இந்நிலையில் இனி இவர்களுடன் அகிம்சை வழியாக பேசிப் பயனில்லை என முடிவெடுத்த தமிழினம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது.

அகிம்சை ரீதியாக சுமார் 1950 தொடக்கம் 20 வருடங்கள் இடம்பெற்ற நிலையில் 1970 தொடக்கம் ஆயுதப் போராட்டம் உருவெடுத்தது. இப் போராட்டத்தால் பல அழிவுகளை இந்நாடு சந்தித்தது. இதில் தமிழினம் பாரிய உயிரிழப்புகளையும், சொத்துக்களையும் இழந்தது. அதேபோல் கணிசமான அளவு சிங்கள மக்களும் இவ் யுத்தத்தால் பாதிக்கப்பட்டனர். தமிழர்கள் பேரம் பேசும் சக்தியாக தமிழர்களின் பலமாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு காணப்பட்டது. 1970 தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை தமிழின விடிவுக்கான தமிழர்களின் சுயநிர்ணயத்துக்கான போர் இடம்பெற்றது. இப்போர் இடம்பெற்ற சம காலங்களில் அமைதிப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றது. இதில் சில ஐரோப்பிய நாடுகள் மத்தியஸ்தம் வகித்தன. 1980களில் திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் 2002 ஒஸ்லோ பேச்சுவார்த்தை வரை பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகள் பல சுற்றுக்களாக இடம்பெற்றது. இதில் 1960களிலிருந்து பழம்பெரும் தமிழ் தலைமைகள் தொடக்கம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் வரை இலங்கை பேரினவாத அரசுடன் பல ஒப்பந்தங்கள் வெளிநாட்டு அனுசரணைகளுடன் இடப்பட்டு அவ் ஒப்பந்தங்கள் அனைத்தும் இந்த சிங்கள மேலாதிக்க சிந்தனை கொண்ட அரசியல் தலைமைகளால் கிளித்தெறியப்பட்டன.

1960களில் பண்டா - செல்வா ஒப்பந்தம். அதன் பின்னர் திம்பு பேச்சுவார்த்தையூடாக இடம்பெற்ற ஒப்பந்தங்கள், அதன் பின்னர் தமிழர்களால் பெரிதும் நம்பப்பட்ட தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு பெரும் ஆதரவு வழங்கி ஆயுதம் முதல் பயிற்சிகள் வரை வழங்கிய எமது நாட்டுக்கு அருகில் உள்ள உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடு எனப் போற்றப்படும் இந்தியா, 1987 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் ரஜீவ் காந்தியும் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களும் மேற்கொண்ட ஒப்பந்தம் தமிழர்கள் நலன்சார்பு இல்லாமல் இந்தியா பிராந்திய நலனுக்காக போடப்பட்ட ஒப்பந்தமும் அத்துடன் இந்தியா தனது இராணுவ வல்லமையை பரீட்சித்துப்பார்க்க திட்டமிட்டு போடப்பட்ட ஒப்பந்தமுமாக இவ் ஒப்பந்தம் காணப்பட்டது. இவ் ஒப்பந்தம் மூலமாக மாகாண சபை முறைமை இலங்கையில் கொண்டுவரப்பட்டது. இதில் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருந்தன. தமிழர்கள் தமக்கு தமிழீழமே முடிந்த முடிவாக இருந்த நிலையில் மாநில சுயாட்சியை கூட அக்காலத்தில் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் மாகாண சுயாட்சி என்ற பதத்திற்கு இந்தியா கொண்டு சென்றது. இதுவும் கால கிரமத்தில் கிழித்துப்போடப்பட்டது. இவ் ஒப்பந்தத்தால் தமிழர்களுக்கு எதுவித பயனும் இல்லாதபொழுதிலும் வட கிழக்கு இணைப்பு சாத்தியமானது. ஆனால் பேரினவாத சிங்களத் தலைமைகள் இவ் ஒப்பந்தம் ஊடாக ஈழம் மலரப்போகின்றது, இந்தியா தமிழர்களுக்கு தமிழீழத்தை பெற்றுக்கொடுக்கப் போகின்றது என சிங்கள மக்கள் மத்தியில் தனது பிரச்சாரத்தை முன்னெடுத்து, சிங்கள மக்களை இந்தியாவுக்கு எதிராக திருப்பி, அத்துடன் யாருக்காக உதவி செய்ய முன்வந்ததோ அது பிராந்திய நலனாக இருந்தாலும் ஓரளவுக்கு தமிழர்கள் பிரச்சினைக்கு தீர்வைப்பெற முயற்சித்த நேரத்தில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களின் நரித்தனமான அரசியல் முதிர்ச்சியால் இந்தியாவையும், தமிழர்களையும் மோதவிட்டு குளிர் காய்ந்தார். இக்காலகட்டங்களில் இடம்பெற்ற ஓர் சம்பவம், தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்கள் சுதந்திரக்கட்சியின் உறுப்பினராக இருந்தபொழுது மிக கடும் தொணியில் இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டு இருப்பதை சாடியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறு மிகப்பெரும் இலங்கை - இந்தியா ஒப்பந்தம் கிழித்துப்போடப்பட்டது. அதன் பின்னர் 2002ஆம் ஆண்டு நோர்வே அனுசரனையுடன் மேற்கொண்ட ஒஸ்லோ உடன்படிக்கை மற்றும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது. இதன் மூலம் நோர்வே ஜப்பான் அனுசரனைகளுடன் ஒஸ்லோவில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் அரச தரப்புடன் விடுதலைப்புலிகள் ஈடுபட்டனர். இதற்கு முழு மத்தியஸ்தம் நோர்வே வழங்கியிருந்தது. இப்பேச்சுவார்த்தைகள் ஊடாக பல சாதக பாதக நிலைமைகள் தோன்றின. பல காலம் மூடப்பட்டு இருந்த யாழ் கண்டி ஏ - 9 வீதி திறக்கப்பட்டு யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.

விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அரசியல் நடவடிக்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது. பிரிந்து செயற்பட்ட முன்னாள் ஆயுத அமைப்புகள், பழம்பெரும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைக்கப்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, இவ்வாறு சில சாதகமான விடயங்கள் இடம்பெற்ற பொழுதிலும் பாதகமான விடயங்களும் இடம்பெற்று இறுதியில் இவ் உடன்படிக்கை நீர்த்துப்போனது. அத்துடன் இலங்கையில் ஆட்சி மாற்றங்களும் ஏற்பட்டு 3ஆம் கட்ட போர் ஆரம்பமாகி 2009ஆம் ஆண்டு உலகின் பல வல்லரசுகளின் உதவியுடனும் எமது மக்களுக்கும் எமது சுயநிர்ணயப் போராட்டத்துக்கும் எப்பொழுதும் உதவியாக இருக்கும் என நம்பிய இந்தியாவின் உதவியுடனும் பல இலட்சம் அப்பாவி மக்களையும் மக்களுக்காக போராடிய விடுதலைப்புலிகளையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்ததுடன் தமிழர்களின் ஆயுத பலம் மௌனித்துப்போனது. அத்துடன் தமிழர்களின் பேரம் பேசும் சக்தியும் அழிந்துபோனது. இருந்தபொழுதிலும் தமிழர்களுக்கோ பேசும் சக்தியாக விடுதலைப்புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு செயற்பட்டு வந்தது. ஆனால் அதுவும் சில காலங்களில் தாம் ஏன் உருவானோம். ஏதிலிகளாக உள்ள தமிழ் மக்களுக்கு உறுதுணையாக நின்று அவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற முயற்சிக்காமல் பதவி ஆசையும் அரசியல் காழ்ப்புணர்ச்சியும் கொண்டு ஒருவரையொருவர் குற்றம்சாட்டிதமக்குள்பிளவுபட்டு அரசு எதை விரும்புகின்றதோ அதே வழியில் பயணிக்கும் நிலைக்கு சென்றுள்ளது. 2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நல்லாட்சி என்று கூறி மைத்திரி - ரணில் ஆட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் இன அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் 2019 வரை இடம்பெற்றது. ஆனால் தமிழர்களுக்கு எதுவித நன்மையும் இன்றி கடந்துபோனது இவ் ஆட்சி. ஆனால் அந்த ஆட்சியில் 5 வருடங்களில் இராணுவ அச்சமின்றி இராணுவ அடக்குமுறையின்றி தமிழர்கள் வாழ்ந்தார்கள் இது மட்டுமே இடம்பெற்றது. இந்நிலையில் 2019 ஜனாதிபதி தேர்தலில் இறுதி யுத்த முடிவுக்கு தலைமை தாங்கிய அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தனிச் சிங்கள மக்களின் ஆதரவுடன் வெற்றியீட்டினார். அத்துடன் தொடர்ந்து இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் அவர் சார் கட்சி வெற்றிபெற்று 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறவும் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட சோகமான வரலாற்று நிகழ்வு இடம்பெற்ற காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச அவர்கள் பிரதமர் ஆனார். அடுத்து 19 ஆம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு 20ஆம் திருத்தச்சட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் இச்சட்டம் மூலம் மீண்டும் கிடைக்கப்பெற்றது. ஜனாதிபதி பதவியேற்றவுடனேயே வடகிழக்கு முழுவதும் இராணுவ பிரசன்னம் அதிகரித்ததுடன் தமிழ் மக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. சகல அரச முக்கிய பதவிகளில் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகள் நியமிக்கப்பட்டனர். பொலிசாருக்கு இருந்த அதிகாரங்கள் சில இராணுவத்துக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் தமிழர் பகுதிகளில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் விடுவிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டதுடன் இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமிழர்களின் விடிவுக்காக போராடிய தமது உறவுகளை நினைவு கூர்வதற்கு முற்றாக தடைவிதிக்கப்பட்டது. அத்துடன் தமிழ் மக்களின் இந்து கலாச்சார நிகழ்வான விளக்கீடு எனும் தீபம் ஏற்றும் திருநாள் கூட கடைப்பிடிக்க முடியாமல் இலங்கை அரசின் காவல் துறையினராலும் இராணுவத்தாலும் அச்சுறுத்தப்பட்டன.

இவ் அரசினால் தமிழர் அடக்குமுறைகள் அதிகரித்து வரும் நிலையில் தமிழ் அரசியல் தலைமைகள் இவ் அரசினை தமிழர்களின் அரசி யல் தீர்வுக்கான வழிக்கு கொண்டுவர அண்மையில் மீண்டும் இந்திய மத்திய அரசின் தலைமையை நாடியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் மிகவும் பலம் வாய்ந்த ஓர் பிரதமராகவும் அவரது அரசியல் செயற்பாடுகள் மிகவும் ஓர் தீர்க்கமாககாணப்படுவதாலும் அடுத்து எமது நாட்டின் ஜனாதிபதியை வழிக்கு கொண்டுவரக்கூடிய சக்தி அவரிடம் மட்டுமே உள்ளதாலும் மோடி பிரதமராக உள்ள காலத்தை தவறவிட்டால் மீண்டும் தமிழர்களின் தீர்வானது எட்டாக்கனியாகிவிடும். ஆகவே அவரை நாடி இப்பிரச்சினைகளுக்கு தீர்வு எடுக்க எமது தமிழ்த் தலைமைகள் முடிவெடுத்து அதற்குரிய செயற்பாடுகளில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு மோடியின் அரசும் சாதகமான பதில்களை வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது. அத்துடன் மோடி அரசுக்கும் தமிழர்கள் பால் ஓர் அனுதாபம் உள்ளது போல தென்படுகின்றது. ஏனெனில் மோடி அரசு பதவியேற்றது தொடக்கம் தமிழர் பிரதேசங்களில் பல அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை புனரமைத்து, சர்வதேச விமான நிலையமாக மாற்றிய மைத்தமை, இந்திய வீட்டுத்திட்டம் என பல விடயங்கள் இடம்பெற்று வருகின்றன.

11ஆம் பக்கம் பார்க்க...

**தமிழ் கிறுக்கன்**

# ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அவர்களே! யார் பயங்கரவாதிகள்?

ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அவர்களே! யாருடன் பேச்சுவார்த்தை நடத்தினீர்கள். விடுதலைப்புலிகள் பயங்கர வாதிகள் என்றால் ஏன் பேச்சுவார்த்தைகள் நடத்தினீர்கள்? புத்தி சுயாதீனத்துடன் பேசுகிறீர்களா? ஒரு சிவில் நிர்வாகத்தை கொண்டிருந்த விடுதலைப் புலிகளுடன் தாங்களின் சமரசப் பேச்சுக்கள் பதிலாக உள்ளது. அது பொய் என்கிறீர்களா? நீங்கள் புலிகளுடன் எத்தனை தடவை பேசியுள்ளீர்கள்.

விடுதலைப்புலிகளுடன் போராடி வெல்ல முடியாது போக தாங்கள் பேச்சுவார்த்தைக்கு சென்றுவிட்டு சர்வதேச நாடுகளின் உதவியோடு குறிப்பாக சீனா. இந்தியா. அமெரிக்கா போன்ற நாடுகளுடன் கைகோர்த்து ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திவிட்டு இன்று ஏப்பம் விடக்கூடாது. தாங்கள் விடுதலைப்புலிகளுடன் போராடி வெற்றிபெற்ற ஒரு சமர்க்களத்தை சொல்லுங்கள். வடகிழக்கில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தை இழந்ததை தவிர எதைக் கண்டீர்கள். மிரட்டல் விடக்கூடாது. மற்றுமொரு போருக்குத் தயாராகுமாறு மறைமுகமாக சொல்கிறீர்களா? போராட்டம் என்பது தமிழ் இனத்துடன் பின்னிப்பிணைந்தது. தற்போதைய காலகட்டத்தில் மீண்டும் தமிழ் இனத்தை சீண்டிப்பார்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தங்களுடைய நிலைப்பாடு அதிதீவிரம் அடையுமாறு இருந்தால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும். பொறுப்பு உணர்வுடன் தங்கள் கடமையை செய்யவேண்டும். விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றால் ஏன் சர்வதேச நாடுகளின் உதவியோடு பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டும் கைதிப்பரிமாற்றம் எதற்கு ஏற்படுத்தப்படவேண்டும். இடைக்கால நிர்வாகம் ஏன் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட வேண்டும். முஸ்லீம்களையும் இந்த இனவழிப்பு போராட்டத்தில் இணைத்துக்கொண்டு இன்று கருவேப்பிலையாக தூக்கி வீசிவிட்டீர்கள்.

இந்த அரசு தொடர்ந்தும் நீடிக்கும் என்று எதிர்பார்க்கவேண்டாம். அராஜகம் தொடர்ந்தால் ஆட்சி கவிழ்க்கப்படும். அப்போது தெரியும். பதவி கிடைத்துவிட்டது என்பதற்காக அளவுமீறி பேசக்கூடாது. தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் வாய்ந்த கட்டமைப்புக்களை கொண்டிருந்தமையை அறிந்து இலங்கை அரசு பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்றது.

**விடுதலைப்புலிகளின் வலிமையான கட்டமைப்புக்களை பார்ப்போமாக இருந்தால்.**

01. இராணுவம் (தரைப் படை - பல்வேறு படை அணிகள்) இம்ரான் பாண்டியன் படையணி. ஜெயந்தன் படையணி. சார்ள்ஸ் அந்தோனி சிறப்புப் படையணி. கிட்டு பீரங்கிப் படையணி. ராதா வான்காப்புப் படையணி. குட்டிஸ்ரீ மோட்டார் படையணி. சிறப்பு உந்துகணை செலுத்திப் படையணி. விக்டர் கவச எதிர்ப்புப் படையணி. சோதியா படையணி. மாலதி படையணி. அன்பரசி படையணி. ஈருடப் படையணி. குறிபார்த்து சுடும் படையணி. சிறுத்தைப் படையணி. எல்லைப்படை. துணைப்படை. பொன்னம்மான் மிதிவெடிப் பிரிவு. ஆயுதக் களஞ்சிய சேர்க்கை. பாதுகாத்தல் பிரிவு.

02. கடற்புலிகள் நீரடி நீச்சல் பிரிவு. கடல் வேவு அணி. சார்லஸ் சிறப்புக் கடற்புலிகள் அணி. அங்கயற்கண்ணி ஆழ்கடல் நீச்சல் அணி (பெண்கள்). நிரோஜன் ஆழ்கடல் நீச்சல் அணி. கடல் சிறுத்தைகள் சிறப்பு அணி
03. வான்படை
04. கரும்புலிகள்
05. அரசியற்துறை அரசியல்துறை - பரப்புரைப் பிரிவு.
06. புலனாய்வுத்துறை
07. வேவுப்பிரிவு
08. ஒளிப்பதிவுப் பிரிவு
09. மருத்துவப் பிரிவு லெப். கேர்ணல் திலீபன் சிறப்பு மருத்துவப் பிரிவு
10. கணணிப் பிரிவு
11. மாணவர் அமைப்பு
12. தமிழீழ வைப்பகம்
13. தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
14. அனைத்துலகச் செயலகம்
15. சுங்கவரித் துறை
16.தமிழீழ பொருண்மிய மேம் பாட்டுக் கழகம்
17. தமிழீழப் படைத்துறைப் பயிற்சிப் பள்ளி
18. அரசறிவியற் கல்லூரி
19. தமிழீழக் காவற்துறை காவல்துறை - குற்றத் தடுப்புப் பிரிவு காவல்துறை - குற்ற புலனாய்வுப் பிரிவு
20. வன வளத்துறை
21. தமிழீழ நிதித்துறை
22. விடுதலைப்புலிகள் கலை. பண்பாட்டுக் கழகம்
23. தமிழீழ சட்டக்கல்லூரி. தமிழீழ நீதித்துறைஇ நீதிமன்றுகள்
24. தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை
25. காந்தருபன் அறிவுச்சோலை (ஆதரவற்ற ஆண் குழந்தைகள்)
26. செந்தளிர் இல்லம் (5 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற குழந்தைகள்)
27. செஞ்சோலைச் சிறார் இல்லம் (ஆதரவற்ற பெண் குழந்தைகள்)
28. வெற்றிமனை (வலுவிழந்தோர்)
29. அன்பு இல்லம் (முதியோர்)
30. பொத்தகசாலை






31. விடுதலைப் புலிகள் செய்தி இதழ்
32. ஈழநாதம் செய்தி இதழ்
33. வெளிச்சம் செய்தி இதழ்
34. ஆவணப்படுத்தல்-பதிப்புத்துறை
35. தமிழீழ தேசியத் தொலைக்காட்சி
36. நிதர்சனம்
37. புலிகளின் குரல் வானொலி
38. மாவீரர் பணிமனை
39. நவம் அறிவுக்கூடம் (பார்வை இழந்த போராளிகளுக்கான)
40. மயூரி இல்லம் (இடுப்பின்கீழ் வலுவிழந்த பெண் போராளிகளுக்கானது)
41. சேரன் வாணிபம்
42. சேரன் சுவையகம்
43. பாண்டியன் உற்பத்திப் பிரிவு
44. பாண்டியன் வாணிபம்
45. பாண்டியன் சுவையூற்று
46. சோழன் தயாரிப்புகள்
47. வழங்கற் பிரிவு
48. சூழல் நல்லாட்சி ஆணையகம்
49. நிர்வாக சேவை
50. ஆயுத ஆராய்ச்சி மற்றும் உருவாக்கல் பிரிவு
51. மின்னணுவியல் சிறப்பு உதவிப் பிரிவு
52. திரைப்பட வெளியீட்டுப்பிரிவு. மொழியாக்கப்பிரிவு
53. பெண்கள் மறுவாழ்வு அபிவிருத்தி மையம்
54. தமிழீழ பொறியியல் தொழில்நுட்ப வளர்ச்சித் துறை
55. தமிழீழ விளையாட்டுத்துறை
56. தமிழீழ காலநிலை அறிவுறுத்தல் வாரியம்.

இத்தனை கட்டமைப்புக்களையும் கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளூர் பேச்சுவார்த்தைகளாக 14 சர்வதேச பேச்சுவார்த்தைகளாக 7 பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக சீனா. இந்தியா. அமெரிக்கா போன்ற நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளுடைய தலைவர் பிரபாகரன் தலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் கரும்புலி கட்டமைப்பை தம்வசம் வைத்திருந்தமையினால் குறித்த நாடுகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற காரணத்தினால் அந்த நாடுகள் விடுதலைப்புலிகளின் போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில் நிர்மூலமாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டன. அதில் ஒரு கட்டமாக கையெழுத்தும் இடப்பட்டது. இன்றைய சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடைய தேவையை அரசாங்கம் புரிந்திருக்கலாம். காரணம் என்னவென்றால் கடல்வளம். நிலவளம் என்பவற்றை சீனா. இந்தியா. அமெரிக்கா போன்ற நாடுகள் சுவீகரித்துவிட்டார்கள். தற்பொழுதும் தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்றும் அவர்கள் பற்றி பேசக்கூடாது என்றும் அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இனவாதத்தை தூண்டுகின்ற வகையில் அமையப் பெறுகிறது.

இன்றைய சூழ்நிலையில் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்ற நாடுகள் மீளவும் இலங்கையில் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் அரச தரப்பினர் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். தமிழ் மக்களுடனான போராட்ட வரலாறு என்பது ஒரு இனத்தினுடைய விடுதலைக்கான போராட்டம். இதனை பூகோள அரசியல் வழியில் கொண்டு சென்றால் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப்புலிகளுடனான ஒவ்வொரு கட்ட பேச்சுவார்த்தைகளிலும் நல்லிணக்கம் பேணப்பட்டது. அந்த நல்லிணக்கம் அடிப்படையில் தீர்விற்கான பொறிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மக்களது தீர்வுக்கான பொறிமுறைகள் காலப்போக்கில் நலிவடைந்து போகவே மாவிலாறில் ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் நிறைவுக்கு வந்தது. முப்படைகளையும் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கை அரசாங்கம் அழித்துவிட்டதாக வெற்றி கொண்டாடுகிறது. உண்மையில் சர்வதேச நாடுகளின் உதவியுடன் தான் இவர்கள் வெற்றி பெற்றார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் 1 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி பொது மக்கள் கொலை செய்யப்பட்டார்கள்.


அதை விடவும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் போர்க்களத்தில் தம்மை ஆகுதியாக்கிக்கொண்டார்கள். எம் இனத்தின் விடுதலைக்காக போராடிய வீர மறவர்களை நினைவுகூறக்கூடாது என்று அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்தது. இந்த நிலைமையை மக்கள் ஒரு வெறுப்புடனே பார்க்கிறார்கள். பெற்ற தாய் ஒரு பிள்ளையை தீவிரவாதியாக பார்க்க மாட்டார். அவர் இராணுவம் என்றோ புலிகள் என்றோ வேறுபாடு கிடையாது. அவர்கள் இறந்தால் குறித்த தாய் பிள்ளைகளை அனுஷ்டிப்பார். நினைவு கூறுவார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அரசியலில் தமிழினத்தை வேறு திசைக்கு கொண்டு செல்வதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

ஆகவே தமிழ் மக்கள் எமக்கான ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ளும் வரையிலும் தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்கிற குறிக்கோளுடன் தான் பயணிப்பார்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆகவே ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து செயற்பட வேண்டியது அத்தியாவசியமானதொன்று.

**சுழியோடி**



# பிராந்தியச் செய்திகள்



## கிழக்கில் தொடரும் மழை, வெள்ளம் மக்கள் பாதிப்பு

நாட்டில் வடகிழ் பருவப் பெயர்ச்சி நிலைமை உருவாகியுள்ளதைத் தொடர்ந்து, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் தொடர்ச்சியான மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள முள்ளிப்பொத்தானை பெய்து வருகின்ற அடை மழை காரணமாக தாழ் நிலப்பகுதிகள் மற்றும் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, வடிகான்களிலும் நீர் நிரம்பி வழிந்தும் காணப்படுகின்றன.

தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட முள்ளிப்பொத்தானை வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள ஹிஜ்ரா நகர் முதலாம் இரண்டாம் குறுக்கு ஜாமியா நகர், புஹாரிநகர் பாடசாலை, ஹமீதியா நகர், முஹம்மதியா நகர், சதாம் நகர், தங்க நகர் போன்ற பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை கிராம மக்கள், குறிப்பாக நளாந்த கூலித்தொழிலாளர்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளாதாகவும் கிண்ணியா திருகோணமலை கடற்கரையோரங்களில் கடல் அலை களின் தாக்கம் அதிகரித்துள்ளதோடு கடல் கொந்தளிப்பாகவும் காணப்படுகின்றது. இதன் காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்கும் செல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொரோனாவின் பிடியிலிருந்து சற்று விடுபட்டுவரும் நிலையில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் தொடர் மழை பெய்து வருகின்றது.

கொரோனா அச்சுறுத்தல் நிலையில் இருந்து அம்பாறை மாவட்ட மக்கள் சற்று விடுபட்டு நிம்மதி பெருமூச்சுவிட்ட நிலையில் தமது தொழில்களை ஆரம்பிக்க ஆயத்தமாகினர். இந்நிலையில் பலத்த மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் மக்களது அன்றாட இயல்பு வாழ்கை நிலை மீண்டுமொரு முறை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர்கள் குடலை பருவத்தை அடைந்த நிலையில் மழையின்றி சில பகுதிகளில் வேளாண்மை கருகும் நிலையினை அடைந்திருந்தது. இந்நிலையில் தற்போது பெய்துவரும் மழை வீழ்ச்சி பல விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ள போதிலும், மழை வீழ்ச்சி இடைவிடாது பெய்து வரும் நிலையில் நீர்நிலைகள் யாவும் நீரால் நிரம்பி சில தாழ்நில நெற் செய்கை வயல் நிலங்களும் முற்றாக வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

பகல் நேரத்தில் பயணிக்கும் வாகனங்களின் முன்விளக்குகள் ஒளிரச் செய்யப்பட்டு பயணிப்பதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் பெய்து வரும் அடை மழையால் தாழ்நிலை பகுதிகளில் உள்ள பல இருப்பிடங்கள் வெள்ளத்தால் சூழும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் சில அரச திணைக்களங்கள் உள்ளேயும் நீர் உட்புகுந்துள்ள சந்தர்ப்பங்கள் உள்ளபோதிலும் இதுவரையில் யாரும் இடம்பெயறவில்லை என ஆலையடிவேம்பு பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தாழ்நிலப்பிரதேசங்களில் வாழும் மக்களது கோரிக்கைக்கு அமைய கடலுடன் இணையும் ஆலையடிவேம்பு சின்னமுகத்தவாரம் பகுதி நீர்வடிந்தோடுவதன் பொருட்டு அகழ்ந்து விடுவதற்கான ஆலோசனையும் இடம்பெற்று வருகின்றது.

தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக மூதூர் பிர தேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்திலுள்ள ஐந்து வீடுகளுக்குள் மழை நீர் உட்புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் தாழ்நிலப்பகுதியிலுள்ள குடியிருப்புக்கள் சிலவற்றிற்குள் மழை நீர் தேங்கி நிற்பதையும், வீதிகள் நீரில் மூழ்கிக் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தொடர்ச்சியாக இம்மழை பெய்யுமெனின் அதிகளவான குடியிருப்புக்குள் வெள்ள நீர் உட்புகும் அபாயம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். திருகோ ணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் பெய்து வருகின்ற அடை மழை காரணமாக தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, வடிகான்களிலும் நீர் நிரம்பி வழிகின்றன.

இம்மாவட்டத்தின் கந்தளாய், கிண்ணியா, மூதூர், திருகோண மலை போன்ற பகுதிகளில் கடுமையான மழை பெய்து வருகின்றது. சிறு வீதிகள் மற்றும் தாழ் நிலப்பகுதிகளில் மழை நீர் நிரம்பியுள்ளன. திருகோணமலை மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் கடல் அலை களின் தாக்கம் அதிகரித்துள்ளதோடு கடல் கொந்தளிப்பாகவும் காணப்படுகின்றன. மீனவர்கள் யாரும் கடலுக்கும் செல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

- தினகரன் -

## காலி: துந்துவ மேற்கு, கிழக்கு மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தல்

காலி மாவட்டம், பெந்தோட்டையிலுள்ள, இந்துறுவ பிரதேசத்திலுள்ள, துந்துவ மேற்கு மற்றும் துந்துவ கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வறிவிப்பை, கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம், (19) இரவு வெளியிட்டிருந்தது.

குறித்த பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மறு அறிவித்தல் வரை குறித்த பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் துந்துவ, இந்துறுவ பிரதேசத்தில் மரண சடங்கொன்றில் கலந்து கொண்ட 10 பேருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடகீழ் பருவப் பெயர்ச்சி நிலை் வடக்கு, கிழக்கில் மழை

ஒரு சில இடங்களில் 100 மி.மீ. வரை மழை எதிர்பார்ப்பு. நாட்டில் வடகீழ் பருவப் பெயர்ச்சி நிலைமை உருவாகியுள்ளது. அதற்கமைய, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் மத்திய மாகாணம் மற்றும் பதுளை மாவட்டங்களில் கடும் மழை பெய்யும் வாய்ப்பு காணப்படுவதாக திணைக்களம் அறிவித்துள்ளது. ஒரு சில இடங்களில் 100 மி.மீ. வரை மழை பெய்யலாம் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கி.மீ. வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாக பிரிக்க மாவட்ட அபிவிருத்தி குழு அனுமதி

கிளிநொச்சி கல்வி வலயத்தினை இரண்டாக பிரிக்க மாவட்ட அபிவிருத்தி குழு அங்கிகாரம் வழங்கியது. மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் இத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தில் தனி கல்வி வலயமாக இருந்த கிளிநொச்சி கல்வி வலயமா னது கரைச்சி, பூநகரி கல்வி கோட்டங்களை இணைத்து தனி கல்வி வலயமாகவும், கண்டாவளை பச்சிலைப்பள்ளி கல்வி கோட்டங்களை இணைத்து தனி கல்வி வலயமாகவும் இரண்டாக பிரிக்க ஆராயப்பட்டது.

அதற்கு அமைவாக ஏகமனதாக தீர்மானம் எட்டப்பட்டுளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார். எடுக்கபட்ட தீர்மானம் தொடர்பில் அவர் கூறுகையில், வலய பிரிப்பு என்பது ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு கல்வி அமைச்சரால் இதற்கான விசேட அனுமதி தரப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தது.

ஆகவே கிளிநொச்சிவலயத்தினை இரண்டாகபிரிப்பதற்கான மும்மொழிவு குறிப்பாக கரைச்சி, பூநகரி பிரதேசத்தை உள்ளடக்கியதாக ஒரு பிரிவை யும், கண்டாவளையையும், பளையையும் இணைத்த ஒரு வலயமாக பிரிப்பதற்கான முன்மொழிவுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது என்றார்.




# நடிகைகள் திறமைக்கு திருமணம் தடையில்லை – நடிகை சமந்தா

நடிகை சமந்தா ஓ.டி.டி. தளத்தில் புதிய நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருகிறார். அதில் தனது சினிமா வாழ்க்கை குறித்து அவர் கூறியதாவது. சினிமாவில் பிரபலமாக ஒரு பூசனிக்காய் அளவுக்கு திறமை இருந்தாலும் போதாது. கடுகளவு அதிர்ஷ்டமும் வேண்டும் என்று சொல்வார்கள். எனக்கு இரண்டுமே பூசனிக்காய் அளவுக்கு இருந்தது.

சினிமா துறையில் அடியெடுத்து வைத்த கொஞ்ச நாட்களிலேயே அற்புதமான கதைகள். கதாபாத்திரங்கள் கிடைத்தன. என்னை விட திறமையானவர்கள். அழகானவர்கள் நிறைய பேர் இருந்தாலும் வாய்ப்புகள் என்னை தேடி வந்தன. அதற்கு காரணம் அதிர்ஷ்டம். திருமணத்துக்கு பிறகும் நல்ல படங்களில் நடித்து கொண்டு இருப்பதற்கு காரணம் நிச்சயம் அதிர்ஷ்டம்தான். அதிர்ஷ்டத்தை அதிகம் நம்புகிறேன். கதாநாயகிகள் திறமைக்கு திருமணம் ஒரு தடை இல்லை. திருமணத்துக்கு பிறகு வாய்ப்புகள் வராது என்று நம்பி அதற்கும் தயாராகி கொண்டுதான் திருமணம் செய்துகொண்டேன். ஆனால் அதிர்ஷ்டம் எனது பக்கம் இருப்பதால் திருமணத்துக்கு பிறகும் நல்ல படங்கள் எனக்கு அமைகின்றன. இவ்வாறு சமந்தா கூறினார்.



# மீண்டும் காதலில் வனிதா

நடிகை வனிதா ஏற்கனவே நடிகர் ஆகாஷை மணந்து 2007–ல் விவாகரத்து செய்தார். பின்னர் ராஜன் ஆனந்த் என்பவரை 2–வது திருமணம் செய்து அவரையும் 2012–ல் விவாகரத்து செய்து பிரிந்தார்.

சில மாதங்களுக்கு முன்பு பீட்டர் பால் என்பவரை 3–வது திருமணம் செய்தார். இது சர்ச்சையானது. பீட்டர் பால் ஏற்கனவே திருமணமானவர் என்றும். முதல் மனைவியை விவாகரத்து செய்யாத நிலையில் அவரை மணந்தது தவறு என்றும் நடிகைகள் லட்சுமி ராமகிருஷ்ணன். கஸ்தூரி உள்ளிட்டோர் விமர்சித்தனர். லட்சுமி ராமகிருஷ்ணனும். வனிதாவும் ஒருவருக்கொருவர் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியும் மோதினர். பின்னர் அளவுக்கு மீறி பீட்டர் பால் மது அருந்துவதாக அவருடன் தகராறு செய்து வனிதா பிரிந்தார். இது பரபரப்பானது. இந்த நிலையில் வனிதா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் “மீண்டும் காதலில். உங்களுக்கு இப்போது சந்தோஷமா” என்ற பதிவை வெளியிட்டு இருக்கிறார். வேறு தகவல் எதையும் அவர் தெரிவிக்கவில்லை. இதனால் வனிதா இன்னொருவரை காதலிக்கிறாரா? என்று வலைத்தளத்தில் ரசிகர்கள் பலரும் கேள்வி எழுப்பி பதிவுகள் வெளியிட்டு வருகிறார்கள்.



# ‘அவெஞ்சர்ஸ்’ இயக்குனர்களின் திரைப்படத்தில் தனுஷ்

கடந்த ஆண்டு உலக அளவில் வசூல் சாதனைகள் அனைத்தையும் முறியடித்த திரைப்படம் 'அவெஞ்சர்ஸ்:எண்டு கேம்'.

இத் திரைப் படத்தை இயக்கியவர் ஜோ ருஸ்ஸோ மற்றும் அந்தோணி ருஸ்ஸோ. மார்வெலின் முக்கிய பிளாக்பஸ்டர்களான 'கப்டன் அமெரிக்கா: தி வின்டர் சோல்ச்சர்', 'கேப்டன் அமெரிக்கா: சிவில் வார்', 'அவெஞ்சர்ஸ்: இன்ஃபினிட்டி வார்' படங்களையும் இயக்கியது இச் சகோதரர்கள்தான். இவர்கள் அடுத்ததாக நெட்ஃப்ளிக்ஸுக்காக 'The Gray Man' என்ற திரைப்படத்தை இயக்கவுள்ளனர். இந் நிலையில் இத் திரைப் படத்தில் ஒரு முக்கியக் கதாபாத்திரத்தில் நடிகர் தனுஷ் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் செய்தியை டெட்லைன் என்கிற பிரபலமான ஹொலிவுட் செய்தி இணைய-தளம் பகிர்ந்துள்ளது. நெட்ஃபிளிக்ஸ் தரப்பும் இதை தங்களது ட்விட்டர் பக்கத்தில் உறுதி செய்துள்ளது.

நடிகர் தனுஷ் ஹொலிவுட் திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டதற்கு ரசிகர்களும். திரைப் பிரபலங்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.




# ஒரு கிராமத்து பேய் படம் – கொம்பு சினிமா விமர்சனம்



ஆவிகள் பற்றி ஆராய்ச்சி செய்யும் 2 பெண்களும். அவர்களின் மூன்று நண்பர்களும் கிராமத்தில் உள்ள பேய் வீட்டுக்கு வருகிறார்கள். படம் 'கொம்பு' படத்தின் விமர்சனம். வழக்கம் போல் ஒரு பேய் வீடு. அந்த வீட்டில் வசித்த 2 பெண்கள் தூக்கில் தொங்குகிறார்கள். அவர்களின் ஆவி. பேய் வீட்டில் சுற்றுவதாக பீதி பரவுகிறது. கிராமவாசிகள் அந்த வீட்டின் பக்கத்தில் போக பயப்படுகிறார்கள்.

இந்த நிலையில். ஆவிகள் பற்றி ஆராய்ச்சி செய்யும் 2 பெண்களும். அவர்களின் மூன்று நண்பர்களும் கிராமத்தில் உள்ள பேய் வீட்டுக்கு வருகிறார்கள். உள்ளே நுழைந்து ஆராய்ச்சி செய்யும் அவர்களை பேய்களின் நடமாட்டம் பயமுறுத்துவதாக உணர்கிறார்கள். நிஜமாகவே அந்த வீட்டில் பேய் இருக்கிறதா, இல்லையா? அங்கே 2 பெண்கள் தூக்கில் தொங்கியது ஏன், எப்படி. அதற்கு காரணம் யார்? என்ற மர்மமான கேள்விகளுக்கு விடைகள். படத்தின் இரண்டாம் பகுதியில் உள்ளன.

'லொள்ளு சபா' ஜீவா கதாநாயகனாக நடித்திருக்கிறார். ரஜினிகாந்தின் பழைய சாயல் உள்ள இவர் சில காட்சிகளில். 'சந்திரமுகி'யையும். மனோதத்துவ டாக்டர் சரவணனையும் நினைவூட்டுகிறார். படத்தின் முன் பகுதியில் இவருக்கு அதிக வேலை இல்லை. பின்பகுதியில் கதாநாயகனுக்கே உரிய கெத்து காட்டுகிறார். திஷா பாண்டே ஆடுகிறார். ஓடுகிறார். ஆவிக்கு பயப்படாமல் அழகு காட்டுகிறார். மும்பை வாசனையுடன் ஒரு நல்வரவு. பாண்டியராஜன், சுவாமிநாதன் இருவரும் தமாஷ். சதீப் கேமரா, கிராமத்து திகிலை கூட்டுகிறது. தேவ் குருவின் இசையில் பாடல்களை காட்டிலும் பின்னணி இசையில் திறமை காட்டியிருக்கிறார். ர.இப்ராகிம் டைரக்ட் செய்திருக்கிறார். படத்தின் முதல் பாதி எந்த பயமுறுத்தல்களும் இல்லாமல் மெதுவாக கடந்து போகிறது. இரண்டாம் பாதியில் எதிர்பாராத திருப்பங்கள்.




## இரத்த சோகையைக் குணப்படுத்த உதவும் பீட்ரூட்

கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த டொனிக். பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கு பீட்ரூட் ஒரு சிறந்த டொனிக். பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும்.

பல மாதங்களாக மலச்சிக்கலினால் துன்பப்படுபவர்களும், மூலக் கோளாறினால் துன்பப்படுபவர்களும் பீட்ரூட் சாறை தண்ணீருடன் கலந்து அரை டம்ளர், இரவு படுக்கைக்கு முன் அருந்தவேண்டும். பீட்ரூட்டை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொண்டால் கிட்னியில் கற்கள் உருவாவதைத் தடுக்கலாம்.



தோலில் ஏற்படும் அரிப்பு, எரிச்சல் போன்றவற்றிற்கு இரண்டு பங்கு பீட்ரூட் ஜூசுடன் ஒரு பங்கு தண்ணீரைக் கலந்து தடவினால் பிரச்சினையிலிருந்து விடுபடலாம். பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும்.

புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், ஊட்டி பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும் பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

பீட்ரூட் பலருக்குப் பிடிக்காது. சிலருக்கு மட்டுமே பிடிக்கும். குழந்தைகளில் பலருக்குப் பிடிக்கும். இது பலருக்கும் சுவை சம்பந்தப்பட்ட ஒன்றாகவே தெரிகிறது. ஆனால் இதற்கென்று பிரத்யேக மருத்துவப் பயன்கள் உண்டு.

பீட்ரூட் சாறுடன் படிகாரத்தை பொடியாக்கி சேர்த்து கலந்து உடலில் எரிச்சல், அரிப்பு உள்ள இடங்களின் மேல் தடவ எரிச்சல் அரிப்பு மாறும். தீப்பட்ட இடத்தில் பீட்ரூட் சாறைத் தடவினால் தீப்புண் கொப்புளமாகாமல் விரைவில் ஆறும்.

பீட்ரூட் கஷாயம் மூலநோயை குணப்படுத்தும். பீட்ரூட் கூட்டு மலச்சிக்கலை நீக்கும். இரத்த சோகையை குணப்படுத்தும். பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும்.







## சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும் குங்குமப்பூ

குங்குமப்பூவை, வெதுவெதுப்பான பாலில் போட்டு, 20 நிமிடம் ஊறவைத்து, பின் அதில் தேன் சேர்த்து கலந்து, முகத்திற்கு மாஸ்க் போட்டால், சருமமானது வெள்ளையாகும்.

மஞ்சள் ஒரு சிறந்த அழகுப் பொருள். இது முகத்தை அழகாக வைக்க உதவுவதோடு, சருமத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதை தடுக்கும். எனவே அத்தகைய மஞ்சளுடன் குங்குமப்பூவை சேர்த்து, தண்ணீர் ஊற்றி கலந்து, முகத்திற்கு தடவி 10 நிமிடம் ஊறவைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவினால், முகத்தில் உள்ள பருக்கள் நீங்கி, முகம் பொலிவாகும்.

குங்குமப்பூவை உணவில் சுவைக்காக சேர்த்துக் கொள்ளலாம். இதனால் உணவு சுவையுடன், இருப்பதோடு சருமத்திற்கு நல்ல பலனும் கிடைக்கும்.

குங்குமப்பூவில் உள்ள நன்மை கிடைக்க வேண்டுமெனில், அதற்கு ஈரப்பசையானது தேவை. எனவே தினமும் குளிக்கும் போது, வெதுவெதுப்பான நீரில் சிறிது குங்குமப்பூவை தூவி 20 நிமிடம் ஊறவைத்து, பின்னர் குளித்தால், முகம் மட்டுமன்றி, உடல் முழுவதுமே நல்ல நிறத்தைப் பெறலாம்.

குங்குமப்பூவை சர்க்கரை மற்றும் தேங்காய் எண்ணெய் கலந்து, அந்த கலவையைக் கொண்டு சருமத்தை ஸ்கரப் செய்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமம் வெள்ளையாகும்.

ரோஸ்வோட்டரில் குங்குமப்பூவை ஊறவைத்து, அந்த கலவையைக் கொண்டு சருமத்தில் தேய்த்து, சிறிது நேரம் ஊறவைத்து கழுவினாலும், சருமத்தின் நிறம் அதிகரிக்கும்.

குங்குமப்பூவானது உடலின் வெப்பத்தை அதிகரிக்கும். இதனால் முகத்தில் பருக்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே இதனை குளிர்ச்சி மிகுந்த சந்தனப் பொடியுடன் கலந்து பேஸ்ட் போல் செய்து, சருமத்திற்கு மாஸ்க் போட்டால், சருமம் மென்மையாகவும், நிறம் அதிகரித்தும் காணப்படும்.



தொகுப்பு :- சப்தஹி

# கொரோனா வைரஸ் தாக்கமும், தமிழ் அரசியல் கைதிகளின் நிலையும்

கடந்தவார தொடர்ச்சி...

ஆக்கிரமிக்கும் இராணுவத்துடன் தமிழர்கள் மோதுகின்றனர். தனது தாய் நாட்டுக்காக போராடுகின்றனர். ஆனால் சிங்களவர்களோ இங்கே கபடி விளையாடுகின்றார்கள் என கூறியது வேறுயாருமல்ல. இதே இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ இந்தியா இராணுவத்தை வெளியேற்றியது அவர் அப்படிப்பட்ட நிலையில் இந்தியா இராணுவம் இங்கு கொல்லப்பட்டதற்கு அஞ்சலி செலுத்த இந்த அரசு அனுமதிக்கும் பொழுது ஏன் தன் இனத்துக்காக போராடிய மாவீரர்களை அஞ்சலி செலுத்த இவ் அரசு தடைசெய்கின்றது. இவ்வாறு உறவுகளுக்கு தாய் தன் மகனுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்த முடியாத நிலையில் ஓர் பரிதாபமான சூழ்நிலையில் இன்று தமிழினம் வாழ்ந்து வருகின்றது.

நாட்டில் உக்கிரம் அடைந்துள்ள கொரோனாவால் சிறைச்சாலை கைதிகள் பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு மிகவும் மோசமான சூழ்நிலை காணப்படும் நிலையில் அண்மையில் மஹர சிறைச்சாலை கலவரத்தில் 11 கைதிகள் உயிரிழந்தும் 110 காயமடைந்த துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. அதற்கான முதற்கட்ட விசார ணையில் அதிக வீரியம் கொண்ட போதை மாத்திரைகள் பாவிக்கப்பட்டதால் இக்கலவரம் உருவானதாக கூறப்படு கின்றது. இம் மாத்திரைகள் முதலில் வெலிக்கடை சிறைச்சாலையில் பரிசோதிக்க இருந்ததாகவும் ஆனால் அங்கு பாதுகாப்பு காரணங்களுக்காக அம் மாத்திரைகள் மஹர சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு வழங்கப்பட்டு இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

உண்மையில் வெலிக்கடையில் இம் மாத்திரைகள் கைதிகளுக்கு வழங்கப்பட்டு அங்கு கலவரம் தோன்றி இருந்ததால் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலை எவ்வாறு இருந்திருக்கும் இது முடிந்துபோன விடயமாக பார்க்க வேண்டாம். இவ் அச்சுறுத்தல் தொடரப்போகின்றது. அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் அண்மையில் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் இல்லை பூச்சியம் நிலையில் தான் சிறைச்சாலைகள் உள்ளன எனக் கூறுவதின் அர்த்தம் என்ன. வரும் நாட்களில் இவ்வாறு போதை மாத்திரை வழங்கி கலவரம் ஒன்றை உருவாக்கி இக்கைதிகளை கொலை செய்ய முயற்சிக்கலாம் என கைதிகளின் உறவினர்கள் அச்சமடைந்துள்ளனர்.

தமிழ் தேசிய அரசியல் தலைமைகளே அரசுடன் இணைந்து அரசியல் செய்யும் எமது தமிழ் அரசியல் தலைமைகளே உங்களிடம் தமிழ் மக்கள் கேட்பது இப்பொழுது ஒன்றைத்தான். இக் கொரோனா வைரஸ் தாக்கத்தால் கைதிகளை விடுதலை செய்ய, அத்துடன் விசாரணை இன்றி இருப்பவர்களை விசாரணை துரிதப்படுத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் இதனை பயன்படுத்தி சிறையில் வாடும் தமிழ் அப்பாவி அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த ஆக்கபூர்வமான முயற்சியை மேற்கொள்ள முனையுமாறு மக்கள் கோரி நிற்கின்றனர்.

இனியும் பிரதேசவாத அரசியல், காழ்ப்புணர்ச்சி அரசியல், வங்குரோத்து அரசி யல், முண்டுகொடுக்கும் அரசியல், பழிதீர்க்கும் அரசியல் என அனைத்தையும் ஒதுக்கிவிட்டு கைதிகள் விடுதலை விடயத்தில் ஓரணியில் இணைந்து கைதிகளின் விடுதலைக்கு பாடுபடுமாறு தமிழினம் வேண்டி நிற்கின்றது.

04ஆம் பக்க தொடர்ச்சி...

**அத்துடன் மோடி ஓர் இந்துத்துவ கொள்கையுடையவர் என்பது இங்கு கவனிக்கத்தக்க விடயம். அடுத்து 1987 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தினாலும் அதன் பின்னர் இடம்பெற்ற ரஜீவ் காந்தி கொலையினாலும் தமிழர்நலன்களில்தள்ளியேநின்றஇந்தியா இப்பொழுது தமிழர்கள் விடயத்தில் தனது செயற்பாட்டை மீளகொண்டு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணம் இலங்கையுடனான தனது எதிரி நாடுகளின் உறவு இதனால் இந்தியா கடும் சீற்றத்துக் குள்ளாகியுள்ளது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் அதேவேளை சீனா - பாகிஸ்தான் உறவுகளில் பலத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கு சீனா பல இராணுவ உதவிகளை வழங்கிவருகின்றது. இது இந்தியாவுக்கு மிகப்பெரும் தலையிடியாக மாறியுள்ளது. ஒருபக்கம் பாகிஸ்தான் மறுபக்கம் லடாக் பகுதியில் சீனா இப்பொழுது அருகில் இலங்கை என மும்முனை தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இந்தியா காணப்படுகின்றது.**

**உலகில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா போன்ற வல்லரசுகள் சிக்கி சின்னாபின்னமாகி வரும் நிலையில் சீனா இராணுவ பொருளாதார கட்டமைப்புகளின் மிகப்பெரும் விஸ்வருபம் எடுத்து வருகின்றது. இது இந்தியாவுக்கு ஆரோக்கியமானது அல்ல. அத்துடன் இலங்கை கொரோனா தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் சீனா பல மில்லியன் டொலர் நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அத்துடன் இலங்கை ஜனாதிபதி சீனா, பாகிஸ்தான் சார் நிலைப்பாட்டில் இருப்பதுடன் எந்த ஓர் வல்லரசு நாடும் தனது நாட்டு இறைமை தனது நாட்டின் அரசியல் சார் விடயங்களில் தலையிட முடியாது என்று திட்டவட்டமாக கூறியுள்ள நிலையில் கோட்டபாய அவர்களின் அண்மைய நிகழ்ச்சி திட்டங்கள் அனைத்தும் உலக வல்லரசுகளை கோபமடையச் செய்துள்ளது.**

**வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முச்சக்கர வண்டிகள் கார்கள் மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டுள்ளன. இதனால் இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை மீது விசனமடைந்துள்ளன. எனவே ஒட்டு மொத்தத்தில் இலங்கையில் தனது பிராந்திய நலன் செல்வாக்கை மீள கட்டமைக்க வேண்டிய உடனடித் தேவை இந்தியாவுக்கு உள்ளது. அத்துடன் இலங்கையை தனது பிடிக்குள் வைத்திருக்க இந்தியாவுக்கு இப்பொழுது உள்ள ஒரேயொரு ஆயுதம் அது ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினையில் மீண்டும் தலையிடுவதே. அதுவும் தானாக இறங்காமல் தமிழ் மக்கள் தமிழ் தேசிய கட்சிகளின் அழைப்பை ஏற்று செயற்படுவது போல அது காட்டி நிற்கப்போகின்றது. இந்நிலையில் இலங்கையும் இந்தியாவை வெறுத்து ஒதுக்கி செயற்பட முடியாது என்பது கடந்த கால நிலைமைகள் இங்கு கோடிட்டு காட்டி நிற்கின்றது. அத்துடன் இலங்கை மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கப்போகும் நிலை காணப்படுகின்றது.**

**அதற்கு சில நடவடிக்கைகள் கட்டியம் கூறி நிற்கின்றது. முதலாவது கொரோனா வைரஸ் தாக்கமும் அதன் மூலமான பொருளாதார நெருக்கடியும். அத்துடன் இலங்கைக்கு கிடைக்க இருந்த மிலேனியம் சலேஸ்சஸ் காப்பிரேசன் வழங்க இருந்த ஐந்து வருடத்திற்கான 480 மில்லியன் அமெரிக்கா டொலர் உதவித்தொகையை இலங்கைக்கு வழங்குவதை நிறுத்தியுள்ளதானது இலங்கைக்கு மிகப்பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இலங்கைக்கு வழங்க இருந்த நிதியை சியாரோ லியோன் நாட்டுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த MCCயின் திட்ட அமைப்புக்குள் இருந்து இலங்கையை வெளியேற்றி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் இலங்கை இந்தியாவை எதிர்த்து அரசியல் பண்ணமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதுடன் அத்துடன் சிறுபான்மை இனங்கள் மீதான அடக்குமுறைகளை உன்னிப்பாக அவதானிப்பதாக ஐ.நா சபையும் தெரிவித்துள்ளது.**

**ஆகவே இக்காலகட்டத்தை தமிழ் தேசிய தலைமைகள் சரியாக பயன்படுத்த முற்பட வேண்டும். ஆனால் முழுக்க முழுக்க இந்தியாவை சார்ந்து இவ் அரசியல் தீர்வு விடயத்தை நகர்த்தாமல் அமெரிக்காவில் தற்பொழுது பதவியேற்கவுள்ள ஜனாதிபதி ஜோ பைடன் அவர்களின் பதவியேற்புக்கு பின்னர் அவரது ஆசிய நாடுகள் மீது அவரது செயற்பாடுகளை அனுமானித்து செயற்பட்டு குறைந்தபட்ச தமிழர்களின் அபிலாசைகள் தீர்க்க தமிழ் தலைமைகள் முற்பட வேண்டும் என்றும் அத்துடன் இவ் விடயங்களில் தனித்து நின்று சாதிப்போம் நல்லபெயர் வாங்குவோம் என பிரிந்து நின்று செயற்படாமல் ஓரணியில் ஓர் கொள்கை அடிப்படையில் ஓர் முகமாக அணிதிரண்டு இக்காலத்திலாவது தமிழர்களின் கண்ணீருக்கு அவர்கள் சிந்திய செந் நீருக்கும் விடிவு கிடைக்க அணிதிரள வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் எதிர் பார்ப்பாகும்.**

# வாழ்க்கை தத்துவங்கள்

புரியாத வார்த்தை இருந்தும் பயன் இல்லை! புரியாத வாழ்க்கை வாழ்ந்தும் பயன் இல்லை....

அழுது நீ கோழையாகாதே! உனக்கு நண்பன் நீயே! உன்னை காப்பற்ற வருபவர் எவர் உளர்? நீயே உன் காவலன்....ஆதலினால் யாரையும் எதற்கும் எதிர்பார்க்காதே!

உனது வாழ்க்கைக்கு எல்லை அமைத்து வாழ்! ஆனால் எல்லைக்குள் ஒரு போதும் வாழ்க்கையை அமைத்து விடாதே....!

இதுவரை ஆராய்ச்சிக்கு உட்படுத்தாத ஒன்று எது தெரியுமா அன்பு. காரணம் அன்பென்றால் அகிலமும் அடங்கிவிடும் என்பதனால்.

ஒருவனின் வார்த்தை தரும் வலியை விட அவன் செய்யும் செயலின் வலி அதிகம்.

அன்பானவர்களிடம் உன் மனதை மறைத்து விடாதே. உன் மனதில் உள்ளதை மறைப்பதாயின் அன்பாய் இருப்பது போல் நடித்து வாழாதே.

கற்பனையில் சித்திரத்தை வரைந்து விடலாம், ஆனால் ஒருவனின் மனதை புரிந்து கொள்ளாமல் நண்பன் ஆகி விட முடியாது.

ஒரு மனிதனின் அதீத அன்பானது தாயிடம் மட்டுமே உள்ளது..

ஒன்றை நாம் பார்க்கும் விதத்தில் அது சரி தப்பு என்று முடிவு எடுத்து விடுகிறோம். அதை நாம் எப்போது சரியா தவறா என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை அப்படி நாம் ஆராய்ந்து பார்த்து விட்டால் சந்தேகங்கள் மனிதர் இடையே தோன்றாது.

ஆயிரம் தடவை உன் சந்தேகத்தை நேரே கேள். அது சிறிய கோபத்தை உருவாக்கும். ஆனால் பதில் கிடைத்து விடும், ஆனால் உன் சந்தேகத்தை நேரே கேட்காமல் உன்னுள் வைத்து மறை முகமாய் ஒருவனைக் காயப்படுத்தாதே. அது உனக்கு எல்லையற்ற துன்பத்தை தந்துவிடும்...

இழப்பு அல்லது பிரிவின்றி எவரும் ஒன்றின் அருமையை உணருவதில்லை.

நான் என்று சொல்லும் போது எனது அகத்தில் இருப்பதையே கூறுகிறோம், எனது என்று சொல்லும் போது எனக்காக புறத்தில் இருப்பதை கூறுகிறோம். இதை எல்லாம் தாண்டி நாம் என்று கூறும் பொழுதே வெளியில் எமக்காக காத்திருக்கும் வாழ்க்கையைப் பெற்றுக் கொள்கிறோம்.

மனிதனாய் பிறந்து மிருகத்தின் குணத்தைக் கொண்டிருப்பதை விட மிருகமாய் பிறந்து அது தன் இனத்தின் மீது காட்டும் அன்பு போல் காட்டி வாழ்ந்து விடு மனிதா!

நிஜங்கள் பலவற்றை கண்ணெதிரே தொலைத்து விட்டு இருளெனும் கனவில் தேடுகிறேன். நீண்ட நாட்களாக, பல மாதங்களாக, சில வருடங்களாக....

கல்லைச் சலவை செய்யும் அருவியே இந்த மனிதனின் மனதையும் ஒரு முறை சலவை செய்து விட்டு செல்வாயா?.

மனதில் பூக்கும் மல்லிகை பூ அன்பு. அதனைத் தூக்கி குப்பையில் போட்டால் கூட நறுமணம் வீசும்.

ஆயிரம் தடவை யோசித்து முடிவெடுப்பதை விட எடுத்த முடிவில் நிரந்தரமாய் இருப்பதே அழகு. நேரத்திற்கு தகுந்த மாதிரி செயற்படாதே.

திட்டமிடல் வாழ்கையில் அவசியமாய் இருக்கிறது, ஆனால் திட்டமிட்ட படி வாழ்வு செல்லாவிடின் வெறுப்பு ஏற்படுகிறது. உங்கள் அத்தியாவசியத் தேவைக்கு திட்டமிடுங்கள். வாழ்க்கையை திட்டமிடாதீர்கள்.

ஆயிரம் பேரின் கண்கள் உன்னை நோக்கினாலும் இரு கண்கள் மட்டுமே என்றும் உன்னை அன்பாக நோக்கும் உன்னைப் பெற்றவள், நீ அவதரிக்க காரணமாய் இருந்தவர்.

கோபம் வருகின்ற பொழுது வார்த்தையின் அளவுகள் அதிகரிக்கின்றன. அன்பானவர்களைக்(அன்பானவரைக்) கூட எதிர்த்து விடுகின்றது..

கெட்டவனாக இருந்து கொண்டு நல்ல பெயர் எடுப்பதைவிட.. நல்லவனாய் இருந்து கெட்ட பெயர் எடுப்பது எவ்வளவோ மேல்..

கடற்கரையில் இருக்கும் கப்பலை விட கடலினுள் இருக்கும் படகின் பெறுமதி அதிகம். அது போல் மனிதா நீ உருவாக்கும் பொருள் உபயோகமானால் சிறப்பு.

பெருங்கடலுக்கு எல்லை சிறிய நிலப்பரப்பு..உனக்கு எல்லை உனது பெற்றோர்.

கடல் எல்லையைத் தாண்டினால் நிலம் அழிந்துவிடும். நீ எல்லையைத் தாண்டினால் நீ அழிந்து விடுவாய்.

தந்தையின் நம்பிக்கை இருக்கும் வரை தனயன்(மகன்) வழிதவறான்.

தாயின் அன்பு இல்லையானால் தனபதியாய்(குபேரன்) இருந்தும் பயன் இல்லை.

# பரசிடோமோல் "சப்போஸ்டரி" பயன்பாடு மருத்துவத்தில் ஆபத்தானதல்ல - வைத்தியர் திருமதி விஜி திருக்குமார். (எம்.ரீ.எம்.பாரிஸ்)

மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் அதீத கவனஞ்செலுத்தி அவர்களின் சுக வாழ்விற்கான சுகாதார நடைமுறைகள் பற்றிமக்களைவிழிப்பூட்டும்பணியினை மேற்கொண்டு வரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்திய நிபுணரும், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியர் திருமதி விஜி திருக்குமார் பரசிடோமோல் "சப்போஸ்டரி" (Paracetamol suppository) யினை பயன்படுத்துவதில் பல நன்மைகள் உண்டு எனக்குறிப்பிட்டுள்ளார்.

அது பற்றி விளக்கும் நோக்கில் இத்தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார். "சப்போஸ்டரி" (Suppository) பற்றிய பிழையான, தவறான புரிதலை வைத்திருப்பவர்கள் இதனைப் படித்ததன் பின்னர் இதுபற்றிய தெளிவைப் பெறுவீர்கள் என நம்புகின்றேன். பரசிட்டமோல் (Paracetamol) என்பது காய்ச்சலுக்காக வழங்கப்படுகின்ற ஒரு மருந்து. அது சிறுபிள்ளைகளுக்கு "சிரப்" என்ற விதத்திலும் பெரிய பிள்ளைகளுக்கு மாத்திரை என்ற விதத்திலும் வழங்கலாம். அதை குதம் மூலம் கொடுக்கும் போது "சப்போஸ்டரி" (Suppository) என்று குறிப்பிடுகின்றோம்.

சில பிள்ளைகள் மருந்தைக் குடிப்பதற்கு அருவருப்புப்படுவார்கள். வாந்தி எடுப்பார்கள். அப்படியானவர்களுக்கு இது பெரும் விதத்திலும் உதவும் இதே சமயம், காய்ச்சல், வலிப்பு ஏற்படும் பிள்ளைகளும் இருப்பார்கள். அவர்களுக்கு பரசிற்றமோல் "சப்போஸ்டரி" (Paracetamol Suppository) உதவியாக அமையும். ஏனென்றால், சிலவேளைகளில் நீங்கள் பரசிட்டமோல் (Paracetamol) கொடுத்து அதன் தொழிற்பாடு வரும் முன்னே பிள்ளைகளுக்கு வலிப்பு ஏற்படலாம். ஆனால், பரசிட்டமோல் சப்போஸ்டரி (Paracetamol Suppository) வைக்கும் போது உடனடியாகத் தொழிற்படத் தொடங்குகின்ற காரணத்தினால், விரைவாக அவர்களுக்கு காய்ச்சலை குறைக்கக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. அதனால் அது நன்மை பயக்கிறது.

அதேவேளை, காய்ச்சல் வலிப்பு ஏற்படுகின்ற பிள்ளைகளுக்கு நீங்கள் சில நேரம் பரசிட்டமோல் (Paracetamol) வழங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வலிப்பு ஏற்படலாம். அப்படிஏற்படும்போதும், அது புரைக்கேறலாம். அவ்வாறு இடம்பெறும் போது நுரையீரலில் தாக்கஞ்செலுத்தி உயிராபத்துகள் ஏற்படலாம். இதன் போது பரசிட்டமோல் சப்போஸ்டரி (Paracetamol Suppository) பல நன்மைகளைக் கொண்டு வருகிறது. அதேவேளையில், உங்களுக்கு ஒரு அச்சமிருக்கலாம். பரசிட்டமோல் "சிரப்" புக்கும் பரசிட்டமோல் "சப்போஸ்டரி" க்கும் என்ன வித்தியாசம்? அதன் தொழிற்பாடுகளில் எந்த வித்தியாசமும் கிடையாது. ஆனால், பிள்ளைகளுக்கு சப்போஸ்டொரி (Suppository) வைக்கும் போது, அது விரைவாக தொழிற்பாட்டைக் கொண்டு வரும். ஆனால், மருந்து கொடுக்கும் போது, சிறு தாமதமாக தொழிற்பாட்டைக் கொண்டு வரும். அது மட்டுமே இதன் வேறுபாடு தீமைகள் என்று பார்க்கும் போது, சப்போஸ்டரியில் இல்லை. அது உங்களுக்கு நன்மையாகவே இருக்கும். ஆனால், பல்வேறு இடங்களில் சப்போஸ்டரி என்று கூறும் போது, எல்லோரும் அச்சப்படுவதுண்டு. சப்போஸ்டரி என்று சொல்லும் போது, பல விதமான சப்போஸ்டரி உண்டு. ஆனால், நீங்கள் பரசிட்டமோல் சப்போஸ்டரி (Paracetamol Suppository) யை இங்கு எடுக்க வேண்டும்.

இதேவேளை, பரசிட்டமோல் சப்போஸ்டரி ஒன்றை நாம் எவ்வாறு தெரிவு செய்வது? இவ்வாறு நீங்கள் இதனைத்தெரிவு செய்கின்ற போது, அருகிலுள்ள வைத்தியர் ஒருவரின் ஆலோசனையுடன் தான் தெரிவு செய்ய வேண்டும். நீங்கள் விரும்பியவாறு மருந்தகங்களில் அதனைப்பெற முடியாது. ஏனென்றால், ஒவ்வொருவருடைய நிறைக்கேற்ற விதத்தில் தான் பரசிட்டமோல் சிரப் மற்றும் மாத்திரைகள் வழங்கப்படுகிறது. அவர்களின் வயதுக்கேற்ற விதத்தில் வழங்கப்படுவதில்லை. அது போலவே, இந்த சப்போஸ்டரியும் ஒருவரின் நிறைக்கேற்ற விதத்தில் தான் வழங்கப்பட வேண்டும்.

ஒரு பிள்ளைக்கு இந்த வருடம் வழங்கப்படும் பரசிட்டமோலின் அளவு அடுத்த வருடம் வேறுபடும். காரணம், அந்தப்பிள்ளையின் உடல் வளர்ச்சி கண்டிருக்கும். நிறை மாறுபடும். இதே சமயம் நீங்கள் சப்போஸ்டரியையும் உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு பயன்படுத்த முடியாது.

நீங்கள் சப்போஸ்டரி வைத்து 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள வைத்தியரை நாடி, உங்கள் காய்ச்சலுக்குரிய காரணத்தை அறிந்து, அதற்குரிய சிகிச்சையையும், வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும். அதே நேரத்தில், 24 மணி நேரத்துக்குள் நீங்கள் சப்போஸ்டரி வைப்பதால் ஒரு பிரச்சினையும் கிடையாது.

தற்போது டெங்கு அபாயமுள்ள பிரதேசங்களிலும் உங்களுக்கு ஏற்படும் காய்ச்சலின் போது, சப்போஸ்டரி வைத்துக் கொள்வது ஆபத்தானதல்ல. ஆனால், பல்வேறு விதமான சப்போஸ்டரிகளும் உண்டு. அதனை நீங்கள் பயன்படுத்தக்கூடாது. இது பற்றிய மேலதிக விளக்கங்கள் உங்களுக்குத் தேவையென்றால், கூகுள் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்ட இணையத்திலிருந்துதகவல்களைப்பெற முடியும். மேலும், சப்போஸ்டரி வைக்கும் முறையை அருகிலுள்ள வைத்தியரை நாடி அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார்.



**கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு 2021 வரவு செலவுத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாட்டின் பாதையை தீர்மானிக்கும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தினூடாக உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒரு மாதத்திற்கு 100 கோடி ரூபாய் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

பதுளை ஊவா பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் (2020.12.18) இடம்பெற்ற கிராமத்துடன் கலந்துரையாடல் ஊடாக வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு தேசிய வேலைத்திட்டத்தின் ஊவா மாகாணத்திற்கான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டங்களுக்காக இந்த நிதிஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிராமத்திற்கு அவ்வாறான ஒரு திட்டத்தையேனும் செயற்படுத்துவது அனைவரதும்பொறுப்பாகும் என்றும் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த பசில் ராஜபக்ஷ,
கிராமப்புற தேவைகளுக்காக இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போது இருந்த பொருளாதார நிலை போன்றே, கொவிட் தொற்று நிலை காரணமாக முகங்கொடுக்க நேரிட்ட நிதி நெருக்கடிகள் தொடர்பிலும் நீங்கள் அறிவீர்கள்.

இன்று சுற்றுலாத்துறை வர்த்தகம் வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டில் தொழில் புரிபவர்களிடமிருந்து மாத்திரமே வெளிநாட்டு பணம் எமக்கு கிடைத்தது. நவம்பர் மாதமளவில் அதில் 34 வீத வளர்ச்சி ஏற்பட்டது.

எதிர்காலத்தில் புதிய சந்தை வாய்ப்புகளை இணங்காண்பது போன்றே திறமையான தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அந்நிய செலாவணியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம்.

வெளிநாட்டு நன்கொடைகள் மற்றும் கடன்களை வழங்கும் பல நாடுகள் இன்று கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமையால் வெளிநாட்டு நன்கொடைகளும் கிடைப்பதில்லை. அதே வேளை அரசாங்கத்தின் கடன் பெறும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நாட்டிற்கு வருகைத்தரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு 14 நாட்கள் தனிமைப்படுத்தல் செயற்பாட்டிற்கு உள்ளாக வேண்டி ஏற்படுகிறது. அவ்வாறான சூழலிலும் கூட கடந்த மாதம் எமது நாட்டில் புதிய தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கு முடியுமானதாயிற்று. செப்டம்பர் மாதத்தில் பில்லியன் டொலர் பெறுமதிக்கும் அதிகமான ஏற்றுமதி வருவாயை ஈட்ட முடிந்தது. இதனால் நம் நாட்டிற்கான எரிபொருள் மற்றும் ஔடத இறக்குமதிக்கு தடை ஏற்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே 2021 வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக கிராமப்புற அபிவிருத்தி அடையாளம் காணப்பட்டுள்ளன. அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் முன்பள்ளி, மகப்பேறு சிகிச்சை நிலையம் என்பவற்றை பெற்றுக்கொடுப்போம். நவீன உலகிற்கு பொருந்தும் வகையில் கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தி கிராமப்புற பாடசாலைகளின் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் நீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்துவோம். டிஜிட்டல் இலங்கையாக நாட்டை மாற்றுவதற்கு ஜனாதிபதி முயற்சித்து வருகிறார். எதிர்வரும் 12 மாதங்களில் இலங்கையிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் தேவையான தகவல் தொடர்பு வலையமைப்பை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.


கடந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக் காலத்தை போன்றே இம்முறையும் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளின் அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அனைவருக்கும் குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு, கிராமப்புற விளையாட்டு வீரர்கள் முன்வருவதற்கு வாய்ப்பளித்தல் போன்றவற்றுக்காக 8400 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு குளங்கள் புனரமைக்கப்படுகின்றன. நகர்ப்புற சுற்றாடலில் ஒரு நகர்ப்புற வனத்தையேனும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாழ்வாதார வழிகளுக்காக 10 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமத்தின் முன்மொழிவுகளுக்கு அமைய திட்டங்களை முன்வைக்க பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். கிராமங்களிலிருந்து கருத்துக்களை பெறுவதற்கு 14021 கிராம சேவகர் பிரிவுகளிலும் கூட்டங்கள் நடத்தப்படும். கிராம முன்மொழிவுகளை செயற்படுத்தும் போது பெரும்பாலானோருக்கு பயனளிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பிரதேச ஒருங்கிணைப்பு குழுவுக்கு, மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு, சம்பந்தப்பட்ட அடையாளம் காணப்பட்ட அமைச்சிற்கு அல்லது ஜனாதிபதி செயலணிக்கு இந்த திட்டங்களை முன்வைக்கவேண்டும். கிராமத்தின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலான வேலைத்திட்டங்களை பல கிராம சேவகர் பிரிவுகளை இணைத்து மேற்கொள்ளுங்கள். வித்தியாசமாக சிந்திக்க அஞ்ச வேண்டாம்.

இந்த வரவு செலவுத் திட்டம் நாடு செல்லும் பாதையை தீர்மானிக்கும் வரவு செலவுத் திட்டமாகும். நீங்கள், நாம் அனைவரும் ஒன்றிணைந்து சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் சுபீட்சமான நாட்டை உருவாக்க முடியும். நாட்டினதும், நாட்டு மக்களதும் நன்மைக்கான தீர்மானங்களை மேற்கொள்வதிலிருந்து ஒருபோதும் பின்வாங்க போவதில்லை. சுற்றுலாத்துறை வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நாம் முயற்சித்து வருகி றோம். சுகாதார வழிகாட்டல்களுக்கமைய சுற்றுலா வர்த்தகத்தை முன்னோக்கி கொண்டு செல்வோம். அதற்கமைய முதலாவது குழு எதிர்வரும் 26ஆம் திகதி நாட்டிற்கு வருகிறது.

இந்த வருடம் எதிர்பார்த்த அளவு மழைவீழ்ச்சி காணப்படவில்லை. அதனால் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சேனா புழுக்களின் தாக்கமும் ஏற்பட்டது. வறட்சி நிலை மேலும் மோசமடைந்தால் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான தேவை ஏற்படும்.

கழிவு முகாமைத்துவத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எமது அரசாங்கம் தயார். கழிவின் மூலம் மின்சாரத்தைஉற்பத்திசெய்வதற்கானதிட்டம் வத்தளையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. அந்த திட்டம் வெற்றியளித்தால் நாடு முழுவதும் அவ்வாறான திட்டங்களை செயற்படுத்துவோம். உள்நாட்டு உற்பத்திக்காக சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் உயர் தரத்திலான உள்நாட்டு உற்பத்திகளுக்காக எமது உற்பத்தியாளர்களை ஊக்குவிப்போம்.




## நிலவில் எடுத்த பாறைகளுடன் பூமியை வந்தடைந்தது சீன விண்கலம்

நிலவிலிருந்து கற்கள், பாறைகளை பூமிக்கு எடுத்து வந்து ஆய்வு செய்வதற்காக இருந்து கடந்த மாதம் 24ஆம் திகதி சீனா ஒரு விண்கலம் அனுப்பியது.

'சேஞ்ச்-5' (Change5) என்ற அந்த ஆளில்லா விண்கலம் இந்த மாதம் 1ஆம் திகதி நிலவில் பத்திரமாக தரை இறங்கியது. அங்கு திட்டமிட்டபடி கற்கள், பாறைகள் போன்றவற்றை சேகரித்தது.

அதன்பின் கடந்த 3 ஆம் திகதி அந்த விண்கலம் நிலவு பரப்பில் இருந்து புறப்பட்டது. இது நிலவை சுற்றிக் கொண்டிருந்த ராக்கெட் விண்கலத்துடன் கடந்த வாரம் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது.


அந்த விண்கலத்தில் இருந்த 4 என்ஜின்கள் 22 நிமிடங்கள் இயக்கப்பட்டது. இதையடுத்து நிலவில் எடுக்கப்பட்ட பாறை, கற்களுடன் கடந்த 14ஆம் திகதி விண்கலம் பூமியை நோக்கி திருப்பப்பட்டது.

இந்நிலையில், பூமியை நோக்கி தனது பயணத்தை தொடங்கிய 'சேஞ்ச்-5' விண்கலம் இன்று அதி காலை 1.30 மணியளவில் சீனாவின் இன்னர் மங்கோலியா மாகாணம் சிசிவாங்க் மாவட்டத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இதையடுத்து, அந்த விண்கலத்தில் கொண்டுவரப்பட்ட நிலவின் பாறை, கல் துகள்களை சேகரித்த சீன விண்வெளி விஞ்ஞானிகள் அதை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவெ அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் நிலவுக்கு விண்கலத்தை அனுப்பி அங்கிருந்து பாறைகள், மணல் போன்றவற்றை பூமிக்குக் கொண்டு வந்து ஆய்வு செய்தன.

அதற்கு பின் 45 ஆண்டுகளுக்கு பிறகு நிலவில் இருந்து பாறை மற்றும் மணல் துகள்களை கொண்டு வந்த 3ஆவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றுள்ளது.



## பிரித்தானியாவில் இயக்கப்பட்ட உலகின் அதிவேகக் கார்

உலகின் வேகமாகச் செல்லும் கார் பிரித்தானியாவில் இயக்கப்பட்டது. அமெரிக்காவின் டெக்ஸாசைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டுவரும் ஹென்னஸி நிறுவனம் குறித்த அதிவேகக் காரினைத் தயாரித்துள்ளது.

2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புக் கொண்ட அந்தக் கார் ஹென்னஸி வெனம் F5 என்று பெயர் சூட்டப்பட்டது.

பிரித்தானியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வெனம் F5 மணிக்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் இயக்கப்பட்டு உலகின் அதிவேகமான கார் என்ற பெருமையைப் பெற்றது.

ஏற்கனவே இந்தச் சாதனையைப் படைத்திருந்த புகாட்டி நிறுவனத்தின் சிரான் காரின் சாதனையை வெனம் எ.்.ப் 5 முறியடித்துள்ளது.



## Nokia C1 Plus 4G ஸ்மார்ட்போன் அறிமுகம்

முந்தைய C-series தொலைபேசிகளின் வெற்றியைக் கட்டியெழுப்ப, நொக்கியா தொலைபேசிகளின் இல்லமான HMD குளோபல் குடும்பத்திற்கு ஒரு புதிய சேர்த்தலை அறிவிக்கிறது. புதிய நொக்கியா C1 Plus 4G நொக்கியா ஸ்மார்ட்போன் ஆகும். இது அறிமுக ஸ்மார்ட்போன் அனுபவங்களின் தரத்தை உயர்த்துவதோடு சிறந்த தரத்தையும் கொண்டு வருகிறது. அனைவருக்கும் மலிவான ஸ்மார்ட்போன் அனுபவங்களை கொண்டு வருவதே C-series நோக்கம். நொக்கியா C1 Plus , C -தொடரின் அறிமுக நிலைக்கு 4 G இணைப்பைக் கொண்டு வருகிறது. இது உலகெங்கிலும் அதிகமான பயனர்களுக்கு பரந்த அனுபவங்களை வழங்குகிறது.

நொக்கியா C1 Plus அண்ட்ராய்ட் 10 (கோ பதிப்பு) உடன் வருகிறது, உங்களுக்கு பிடித்த விடயங்களுக்கு ஏராளமான இடங்களை விட்டுச்செல்கிறது. இலகுவான பயன்பாடுகள் மற்றும் குறைந்த ப்ளோட்வேர் மூலம், 3000 பாடல்கள் அல்லது 13 மணிநேர எச்டி வீடியோவை சேமிக்க இது அனுமதிக்கிறது.

ஒரு சிறந்த ஸ்மார்ட்போன் அனுபவத்தைக் கொண்டு வருவதற்கும், ஸ்மார்ட்போனுக்கான முதல் படியை அனைவருக்கும் உண்மையிலேயே அணுகக்கூடியதாக மாற்றுவதற்கும் அதன் பணியில் மிகவும் வெற்றிகரமாக இருந்தது. அடுத்த தலைமுறை இணைப்பு ஏற்கனவே இல்லாத நிலையில், உலகெங்கிலும் உள்ள ஆபரேட்டர்கள் மேம்படுத்தப்பட்டு 4G புதிய அடிப்படைக் கோடாக மாற்றப்பட்டு வருகிறது, இதனால் பல 2G மற்றும் 3G சந்தைகள் நிச்சயமற்ற நிலைக்கு ஆளாகின்றன. புதிய நோக்கியா C1 Plus மூலம், உங்கள் புதிய ஸ்மார்ட்போன் தூரம் செல்லும் என்பதையும், எங்கு வேண்டுமானாலும் இணைப்பதை நீங்கள் நம்பலாம் என்பதில் உறுதியாக இருப்பதையும் நாங்கள் உறுதிப்படுத்துகிறோம் என HMD Global Pan Asia பொது முகாமையாளரான ரவி குன்வார் தெரிவித்தார்.




## பயனர்களுக்கு யூடியூப் விடுக்கும் எச்சரிக்கை

முன்னணி வீடியோ பகிரும் தளமாக யூடியூப் காணப்படுகின்றது. யூடியூப் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கானோர் பார்வையிட்டு வருவதுடன், பல்வேறு வீடியோக்களையும் பதிவேற்றம் செய்து வருகின்றனர் .

இதனால் சில சமயங்களில் வீடியோவின் அடிப்படையில் தாக்கி பின்னூட்டல்கள் இடுவதும் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான பின்னூட்டல்களில் ஈடுபடுபவர்களுக்கே யூடியூப் நிறுவனம் எச்சரிக்கை விடுக்கவுள்ளது .

அதாவது பொப் அப் விண்டோ ஒன்றின் மூலம் குறித்த பின்னூட்டலை தொடர விரும்புகிறீர்களா என கேட்கும்.

ஆம் எனின் Post Anyway என்பதை கிளிக் செய்ய வேண்டும் .

அவ்வாறு இல்லாவிடின் Edit என்பதனை கிளிக் செய்து நாகரிகமான முறையில் பின் னூட்டலைகளை மாற்றியமைக்க முடியும் .

எனினும் இவ் எச்சரிக்கை செய்தியினை தாண்டி தவறான பின்னூட்டல்கள் அதிகரிக்குமாயின் எதிர்காலத்தில் குறித்த நபர்களின் யூடியூப் பயனர் கணக்கு முடக்கப்படக்கூடிய சாத்தியங்களும் காணப்படுகின்றன .

YouTube

# விளையாட்டு செய்திகள்

## அடுத்த இரு ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய நாட்டின் பெயர், கொடிகளை பயன்படுத்த தடை!

ஊக்கமருந்து விவகாரத்தில் ரஷ்யா அடுத்த இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் நாட்டின் பெயர், கொடியை பயன்படுத்த தடை விதித்துள்ளது விளையாட்டு தீர்ப்பாயம்.

2014ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் ரஷ்ய வீரர்கள் பலர் ஊக்கமருந்து சோதனையில் சிக்கினர். வீரர்களுக்கு ரஷ்யாவே உதவியாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கு சுவிட்சர்லாந்து நாட்டின் லூசானே நகரிலுள்ள விளையாட்டுக்கான தீர்ப்பாயத்தில் நடைபெற்றது.

அப்போது அடுத்த இரண்டு ஒலிம்பிக் போட்டியில் ரஷ்யா நாட்டின் பெயரையும், கொடியையும் பயன்படுத்த தடைவிதித்து உத்தரவிட்டது.

பொதுவான அணி அல்லது பொது வீரர் என்ற அடிப்படையில் ரஷ்ய வீரர்கள், வீராங்கனைகள் போட்டியில் கலந்து கொள்ளலாம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## 2021 அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் ஆரம்பமாகும் திகதி வெளியானது

ஒவ்வொரு ஆண்டும் அவுஸ்திரேலியன் ஓபன்(Australian Open), விம்பிள்டன், பிரெஞ்ச் ஓபன், அமெரிக்கன் ஓபன் ஆகிய நான்கு முக்கிய டென்னிஸ் தொடர்களாக கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் நடைபெறும். இதில் அவுஸ்திரேலியன் ஓபன் முதல் தொடராக நடத்தப்படும்.

அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடரானது பெப்ரவரி 8ஆம் திகதி தொடங்கும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கமாக ஆண்டுதோறும் ஜனவரி 18ஆம் திகதி தொடங்கும். தற்போது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இப் போட்டிகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியன் ஓபனுக்கான தகுதிச் சுற்று போட்டிகள் தோகாவில் ஜனவரி 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடைபெறும்.

அதன்பின் வீரர்கள் அனைவரும் மெல்பேர்னில் தனிமைப்படுத்தப்பட்டு பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்படுவார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.




## பாகிஸ்தானுக்கு எதிரான இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டி20 கிரிக்கெட் போட்டி ஆக்லாந்தில் நடைபெற்றது.

அந்தவகையில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

39 ஓட்டங்கள் எடுப்பதற்குள் நான்கு விக்கெட்டுகளை இழந்தது. ஜேக்கப் டஃபி இதில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார். பாகிஸ்தான் அணித் தலைவர் சதாப் கான் 42 ஓட்டங்களும், பஹீம் அஷ்ரப் 18 பந்தில் 31 ஓட்டங்களும் அடிக்க பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஜேக்கப் டஃபி 4 ஓவரில் 33 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட் வீழ்த்தினார். குக்கெலின் 3 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 154 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களம் இறங்கியது. தொடக்க வீரர் மார்ட்டின் கப்தில் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆனால் மற்றொரு தொடக்க பேட்ஸ்மேன் டிம் செய்ஃபெர்ட் 57 ஓட்டங்களை விளாசினார்.

மார்க் சாப்மேன் 20 பந்தில் 34 ஓட்டங்களைப் பெற நியூசிலாந்து 18.5 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்களைப் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது.



## லங்கா பிரீமியர் லீக் கிண்ணம் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் வசமானது

லங்கா பிரீமியர் லீக் இருபதுக்கு இருபது தொடரில் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இறுதிப் போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணிகள் மோதியிருந்தன.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுகள் இழப்பிற்கு 188 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணிசார்பாக, சொய்ப் மலிக் 46 ஓட்டங்களையும், திசர பெரேரா ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் தனஞ்சய லக்சன் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.



189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காலி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இந்நிலையில் 53 ஓட்டங்களால் காலி அணி தோல்வியடைந்தது.

அணிசார்பாக, பானுக ராஜபக்ச 40 ஓட்டங்களையும் அசம் கான் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், உஸ்மன் சின்வாரி மற்றும் சொய்ப் மலிக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சொஹைப் மாலிக்கும், தொடரின் சிறந்த வீரராக வனிந்து ஹசரங்கவும் தெரிவாகினர்.




## கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்டு போதைப்பொருள் கடத்தல் கும்பலை கைது செய்த பொலிஸார்

கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டு பெரு நாட்டில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.அந் நாட்டின் தலைநகர் லிமாவிலுள்ள ஒரு வீட்டில் போதைப்பொருள் கடத்தல் சம்பவம் அரங்கேறி வருவதாக பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, கிறிஸ்துமஸ் பண்டிகையை பயன்படுத்தி கடத்தல் கும்பலை பிடிக்க பொலிஸார் முடிவு செய்தனர். இதற்காக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்து போதைப்பொருள் கும்பல் பதுங்கி இருந்த வீட்டின் அருகே வாகனத்தில் சென்றனர்.

கடத்தல் கும்பல் அந்த வீட்டில் தான் இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய அந்த இரண்டு பொலிஸாரும் யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக கிறிஸ்துமஸ் தாத்தா உடையுடன் புறப்பட்டனர். கடத்தல் கும்பல் வீட்டை அடைந்த பொலிஸார் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த சுத்தியலை கொண்டு கடத்தல் கும்பல் பதுங்கி இருந்து வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தனர்.

அங்கு அந்த வீட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது.உடனடியாக அந்த கடத்தல் கும்பலை கைது செய்த பொலிஸார் அவர்களிடம் இருந்து கிலோ கணக்கில் போதைப்பொருளை கைப்பற்றினர்.மேலும், துப்பாக்கி உட்பட பயங்கர ஆயுதங்களையும் கைப்பற்றினர்.இதையடுத்து, போதைபொருள் கடத்தலில் ஈடுபட்ட 4 பேரையும் கைது செய்த பொலிஸார் அவர்களை சிறையில் அடைத்தனர். இந் நிலையில் பொலிஸார் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்த போதைபொருள் கடத்தல் கும்பலை கைது செய்யும் வீடியோ சமூகவலைதளத்தில் தற்போது வைரலாகி வருகிறமை குறிப்பிடத்தக்கது.






## கொரோனாத் தொற்றுக்கு இலக்கானார் அமெரிக்க உள்துறை அமைச்சர் ஹடேவிட் பெர்ன்ஹார்ட்

அமெரிக்க உள்துறை அமைச்சர் டேவிட் பெர்ன்ஹார்ட்டுக்கு (David Bernhardt) கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் நிக்கோலஸ் குட்வின் (Nicholas Goodwin) செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில், பெர்ன்ஹார்ட்டுக்கு அறிகுறியில்லாமல் கொரோனா பாதிப்பு இருப்பதாகவும், இதனால் சுயதனிமைபடுத்தி கொண்டு வீட்டில் இருந்து தொடர்ந்து பணிபுரிவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பிரித்தானியாவில் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ரயில்

கிறிஸ்மஸ் தினத்தை வரவேற்கும் வகையில் பிரித்தானியாவில் எல் இ டி மில் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட நீராவி என்ஜின் ரயிலுக்கு மக்கள் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பு கிடைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஹாம்ப்ஷையரில் இருந்து அல்ரெஷ்போர்டு என்ற இடத்துக்கு நீராவி என்ஜின் பொருத்தப்பட்ட ரயில் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது கிறிஸ்மஸை வரவேற்கும் விதமாக எல் இடி மின் குமிழ்களால் ரயில் அலங்கரிக்கப்பட்டது.

13 ஆயிரத்துக்கும் அதிகமான குமிழ்களால் ரயில் முழுவதும் பொருத்தப்பட்டன. இருளைக் கிழித்துக் கொண்டு சென்ற ரயிலை பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டதாகக் கூறப்படுகின்றது.





## மொடர்னா தடுப்பூசிக்கு அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டுத் துறை ஒப்புதல்

ஃபைசரை தொடர்ந்து, மொடர்னா (Moderna) நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசிக்கும், அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் ஆலோசனைக் குழு அவசரகால பயன்பாட்டுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த தடுப்பூசியால் சில பிரச்சினைகள் ஏற்படும் என்ற புகார் எழுந்தாலும், தடுப்பூசியால் நன்மைகளே அதிகம் என்பதால் ஒப்புதலை அளிப்பதாக, அதற்கான ஆலோசனைக்குழு தெரிவித்துள்ளது.

ஒப்புதல் கிடைத்துள்ளதை தொடர்ந்து முதல்கட்டமாக கொரோனா முன்களப்பணியாளர்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படவுள்ளது. மொடர்னாவிடம் இருந்து 10 கோடி தடுப்பூசி டோசுகளை வாங்க, சுமார் 11,100 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை அமெரிக்க அரசு செய்து கொண்டுள்ளது.




## 2000 அடி உயரத்திலிருந்து விழுந்தும் எவ்வித சேதமுமின்றி கண்டுபிடிக்கப்பட்ட ஐபோன்

ரியோ டி ஜெனிரோவைச் சேர்ந்த எர்னஸ்டோ காலியோட்டா என்பவர் தனது நண்பருடன் சிறிய விமானத்தில் சென்று கொண்டிருந்தார்.

விமானம் 2 ஆயிரம் அடி உயரத்தில் சென்று கொண்டிருந்தபோது சிறிய ஜன்னல் வழியாக எர்னஸ்டோ தனது ஐபோன் மூலம் இயற்கையைப் பதிவு செய்தார். அப்போது எதிர்பாராதவிதமாக ஐபோன் தவறி கீழே விழுந்தது.

பின்னர் தரையிறங்கிய எர்னஸ்டோ தொலைந்து போன ஐபோனை அதில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஜிபிஎஸ் உதவியுடன் கண்டுபிடித்தார். கடற்கரை மணலில் எந்தச் சேதமுமின்றி அந்த போன் கிடந்தது தெரியவந்தது.



## கொவிட்-19: சவுதி அரேபியாவில் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமானது

சவுதி அரேபியாவில் இலவசமாக கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமானது. பிரித்தானியா, அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந் நிலையில் தற்போது சவுதி அரேபியாவிற்கும் முன்தினம் கொரோனா தடுப்பூசி கிடைத்துள்ளது.



இதையடுத்து, அங்கு இலவசமாக கொரோனா தடுப்பூசி போடும் பணி ஆரம்பமாகியுள்ளது. அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் தவ்பிக் அல் ரபியா (Dr. Tawfig Al Rabiah) கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டார்.

சவுதி அரேபியாவில் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள இதுவரை 1, 50,000 க்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நம் உலகம். அதில் அசிங்கமான எல்லாவற்றையும் பொருட்படுத்தாமல். உண்மையிலேயே ஒரு அற்புதமான இடம். எங்களைப் பொறுத்தவரை. மிகப் பெரிய மற்றும் வளமான வாழ்க்கை அனுபவங்களில் ஒன்று. நமது கிரகத்தின் தனித்துவத்தை பயணிக்கும் மற்றும் பார்க்கும் திறன். பலருக்கு. கடற்கரை என்பது மகிழ்ச்சியைத் தரும் இடம். கடற்கரையில். நீங்கள் ஓய்வெடுக்கலாம் மற்றும் உள் சமநிலையை மீட்டெடுக்கலாம். உங்கள் அன்புக்குரியவர்களுடன் தொடர்பு கொள்ளலாம் மற்றும் இயற்கையோடு கூட. அலைகளுக்கு அருகில் சிறிது நேரம் செலவிடுவதில் ஒரு உச்சரிக்கப்படும் சிகிச்சை விளைவு உள்ளது. மேலும் பலர் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

நாம் அனைவரும் விரும்பும் ஒன்று கடற்கரை. மூச்சடைக்கக்கூடிய ஒரு இடத்தில் ஓய்வெடுக்கவும். நீந்தவும். சூரிய ஒளியில் ஈடுபடவும் இது ஒரு சிலிர்ப்பாகும். ஆசியாவிலிருந்து ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா வரை கூட ஆராய பல அற்புதமான கடற்கரைகள் உள்ளன.

உங்கள் சொந்தக் கண்களால் பார்த்தால் இந்த இடங்கள் ஒவ்வொன்றும் இன்னும் தனித்துவமானது என்று நாங்கள் அறிவிக்கும்போது எங்களை நம்புங்கள். முக்கிய விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். பயணம் மட்டுமே நீங்கள் வாங்கக்கூடியது. இதனால் அது உங்களை வளப்படுத்துகிறது.

## நவயோ (நவகியோ) – கிரீஸ்

*கிரீஸ் ஒரு நாடு என்பதில் இரகசியமில்லை, அதில் நீங்கள் கிரகத்தில் பல அழகான கடற்கரைகளைக் காணலாம். ஜாகிந்தோஸ் தீவில் அமைந்துள்ள நவாஜோ கடற்கரை, ஒரு அற்புதமான பிறை வடிவ கடற்கரையாகும், இது படகில் மட்டுமே அடைய முடியும். மூன்று பக்கங்களிலும், கடற்கரை அழகிய பாறைகளால் சூழப்பட்டுள்ளது, நவாஜோவின் அழகைக் காண உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகிறார்கள். இந்த கடற்கரையின் மிகச்சிறந்த விஷயம் என்னவென்றால், அதன் மையத்தில் ஒரு சரக்குக் கப்பல் உள்ளது, அதில் வதந்திகளின் படி, 80 களில் ஒயின் மற்றும் பிற பொருட்களை கடத்தியது. அதனால்தான் கடற்கரைக்கு இரண்டு பெயர்கள் உள்ளன: ஷிப்ரெக் பீச் மற்றும் ஸ்மக்லர்ஸ் கோவ் (கடத்தல்காரர்களின் கோவ்).*





## டோஃபினோ – பிரிட்டிஷ் கொலம்பியா

*கனடாவை நீங்கள் கற்பனை செய்யும் போது, நீங்கள் கடற்கரைகளைப் பற்றி யோசிக்க மாட்டீர்கள், அதனால்தான் டோஃபினோ கடற்கரை சிறப்பு. டோஃபினோ சர்ஃபிங்கிற்கு ஏற்றது, அதே போல் அதன் தெளிவான நீருக்கும் பெயர் பெற்றது. வெள்ளை மணல் கடற்கரை பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள இந்த உலாவல் நகரத்தை நீங்கள் பார்த்திராத அதிசயமான இடங்களில் ஒன்றாக ஆக்குகிறது. சில காட்சிகளை எடுக்க நினைவில் கொள்ளுங்கள், ஆனால் மிக நெருக்கமாக வேண்டாம்!*

## கருவூலம் – ஜமைக்கா

*அனைவருக்கும் சுவாரஸ்யமான ஒன்று இருக்கும் சுற்றுலா தலங்களில் ஜமைக்காவும் ஒன்றாகும். புதையல் விரிகுடா 9.6 கி.மீ நீளமுள்ள கடற்கரையாகும், இது பல விரிகுடாக்களாக பிரிக்கப்பட்டுள்ளது, அவற்றில் நான்கு பொதுமக்களுக்கு திறந்திருக்கும். இந்த கடற்கரை அதன் அழகிய பாறைக் கரைகளுக்கும் நீச்சல் மற்றும் டைவிங்கிற்கான தனித்துவமான நிலைமைகளுக்கும் பெயர் பெற்றது. கடற்கரை ஒரு பெரிய சுற்றுலா ஈர்ப்பு அல்ல, உள்ளூர் மக்கள், ஒரு விதியாக, சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை செய்வதை விட அதிகம் செய்கிறார்கள்: அவர்கள் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள், கவர்ச்சிகரமான மற்றும் ஈர்க்கக்கூடிய கலாச்சார படைப்புகளை உருவாக்குகிறார்கள்.*



## டிக்கெஹாவ் தீவு – தஹிதி

*ஒரு வெள்ளை மணல் கடற்கரை அல்லது இளஞ்சிவப்பு மணல் கடற்கரைக்கு செல்லலாமா என்று தீர்மானிப்பது வாழ்க்கையின் மிகப்பெரிய சங்கடங்களில் ஒன்றாகும். உங்கள் விடுமுறை இடமாக டிகேஹாவ் தீவை நீங்கள் தேர்வுசெய்தால், இரண்டையும் பெறுவீர்கள். இந்த அதிர்ச்சியூட்டும் கடற்கரை கேன்வாஸில் ஒரு படம் போல் தெரிகிறது. சிறிய தீவின் கரைகள் தீண்டத்தகாதவை மற்றும் நீர் பிரகாசமான நீல நிறமானது, இது நீச்சல் மற்றும் டைவிங்கிற்கான ஒரு தனித்துவமான இடமாக அமைகிறது. இந்த இடத்தில் உலகிலேயே அதிக மீன்கள் உள்ளன என்று ஜாக் கூஸ்டியோவின் ஆராய்ச்சி குழு கூறுகிறது. அதனால்தான் ஸ்கூபா டைவிங் மற்றும் ஸ்நோர்கெலிங் இங்கே மிகவும் அருமையாக உள்ளன.*

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.12.2020 அன்று வெளியிடப்பட்டது.